Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-884)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 27 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.ஆகிர் 08 (10.06.2003) செவ்வாய்க்கிழமை இதழ்: 249

## 3.8 பில்லியன் டொலர்கள் ரோக்கியோவில் கிடைத்தது

### எதிர்பார்த்ததிலும் 800 மில்லியன் டொலர்கள் அதிகம்

ரோக்கியோவில் நேற்று ஆரம்பமான, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் - எதிர்பார்க்கப்பட்ட 3 பில்லியன் அமெரிக்க டொலரை விட 800 மில்லியன் அதிகமாகக் கிடைத்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜப்பானிய அரசாங்கம் - தனது நிதியுதவியாக ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

அதேவேளை- ஆசிய அபிவிருத்தி வங்கி ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவிருப்பதாக, அதன் தலைவர் ரடோ (Tadao) தெரிவித்தார்.

ஐரோப்பிய யூனியன் வருட மொன்றுக்கு 290 அமெரிக்க டொலர்கள் வீதம், மூன்று ஆண்டுகளுக்கு 870 அமெரிக்க டொலர்களை வழங்கவிருக்கிறது.

அமெரிக்கா தனது தரப்பிலிருந்து 54 மில்லியன் டொலர்களை வழங்கியிருப்பதாக, அந்நாட்டின் தரப்புக்குத் தலைமை தாங்கிய பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் அறிவித்தார்.

உலக வங்கி வருடமொன்றுக்கு 200

(10 ஆம் பக்கம் பார்க்க)




ரோக்கியோ மாநாட்டில் பிரதமர் ரணிலுடன் ரிச்சர்ட் ஆர்மிரேஜ்

# இலங்கைச் சட்டங்களுக்கு முரணாகாத தற்காலிகமான நிர்வாகக் கட்டமைப்பு!

## ரோக்கியோவில் பிரதமர் பழைய பல்லவி

(ரோக்கியோ)

**வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக - தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பை (Provisional Administrative Structure) உருவாக்கப்போவதாக, ரோக்கியோ உதவிவழங்கும் மாநாட்டில் வைத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார். இந்த அமைப்பின் அதிகாரங்கள் மற்றும் பண்புகள் பற்றி மிகச்சுருக்கமாவே குறிப்பிட்ட அவர், இந்தக் கட்டமைப்பு இலங்கையின் சட்டங்களுக்கு முரணாகாத வகையிலேயே அமைக்கப்படும் என்றார்.**

இதேவேளை - நிரந்தரத் தீர்வு ஒன்றின்போதே அரசியலமைப்பு மறுசீராக்கம் இடம்பெறும் என்றும் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் அனைவரது தீர்மானமும் அச்சமயம் கோரப்படும் எனவும் பிரதமர் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

புதிய தற்காலிக நிர்வாகக் கட்டமைப்புப் பற்றிப் பிரதமர் ரணில் குறிப்பிடும்போது,

இந்தக் கட்டமைப்பு கீழ்வரும் அதிகாரங்களைக் கொண்டிருக்கும் என்றார்.

- போர் பாதித்த பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புதல், புனர்நிர்மாணம், மீள்குடியமர்வு மற்றும் அத்தியாவசிய சேவைகளைத் திறனுடன் வழங்குதல் என்பனவே அவையாகும் என்றார் அவர்.

இதேவேளை - இந்தக் கட்ட

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே முக்கியஸ்தர்கள் எவரும் ரோக்கியோ மாநாட்டில் இல்லை

### வெளிவிவகாரச் செயலரே பங்கேற்றார்

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் ரோக்கியோ மாநாட்டில் நோர்வேயின் சார்பில் முக்கிய பிரதிநிதிகள் எவரும் கலந்துகொள்ளவில்லை.

நோர்வேயின் பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் இம்மாநாட்டில் பங்குபற்றுவதற்கு திட்டமிட்டிருந்தனர். எனினும், விடுதலைப் புலிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்ளாமையைத் தொடர்ந்து, நோர்வே அரசும் தனது முடிவில் மாற்றம் செய்துகொண்டது.

நோர்வே வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஒலவ் கியோர்வன் தலைமையிலான குழுவே இம்மாநாட்டுக்காக நோர்வே அரசினால்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு தமிழ் இளைஞருக்கு லண்டனில் ஆயுள்தண்டனை

இரண்டு கொலைகள் தொடர்பாக - நான்கு இலங்கைத் தமிழர்களுக்கு, பிரிட்டிஷ் நீதிமன்றம் ஆயுள்தண்டனை வழங்கியுள்ளது.

2001 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அரவிந்தன் முத்துக்குமாரசாமி என்ற இளைஞனையும், பெப்ரவரி 2002 இல் சுரேந்திரன் இராமச்சந்திரன் என்ற இளைஞனையும் கொன்றதற்காக - செந்தமிழ் தில்லைநாதன் என்பவருக்கு இரண்டு வருட ஆயுள்தண்டனைக் காலத்தை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

கடன் தகராறு சம்பந்தமாக கொல்லப்பட்ட இருவருக்கும் - மோசமான பலத்த அடிகளும் இடம்பெற்றன.

ஆயுள் தண்டனைபெற்ற, தில்லைநாதனும் அவரது மூன்று சகாக்களும், 1990 ஜூன் மாதம் பிரிட்டனுக்குச் சென்று அங்கு அகதி அந்தஸ்து பெற்றுக்கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## புலிகள் பங்குபற்றாதது கவலையே; மனத்தாங்கலை நாம் உணர்கிறோம்!

### அமெரிக்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் பேச்சு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள், உதவிவழங்கும் நாடுகளின் ரோக்கியோ மாநாட்டில் பங்குபற்றாதது - எமக்கு கவலையைத் தருகின்றது. எனினும் அவர்களின் மனத்தாங்கலை நாங்களும் அறிவோம். அதனை இலங்கை அரசும் உணர்ந்து கொண்டிருக்குமென நாம் நம்புகிறோம்.

-இவ்வாறு, ரோக்கியோ மாநாட்டில் பங்குபற்றிய அமெரிக்க பிரதி வெளியுறவு அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இந்த நாடாளுமன்ற பதவிக் காலத்துடன் அரசியலிலிருந்து ஒதுங்குவதாக அமைச்சர் மகேஸ்வரன் அறிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

இந்த நாடாளுமன்ற ஆயுட்காலத்துடன் அரசியலிருந்து ஒதுங்கப்போவதாக இந்து சமய விவகார அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தி.மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

குருநகர்- றெக்கிளமேசன் கிழக்கு மக்கள் முன்னேற்ற அமைப்பின் ஏற்பாட்டில், சென். றோக்ஸ் சனசமூக நிலையத்தில் நேற்று முன்தினம் 5.30 மணியளவில் இடம்பெற்ற உதவி வழங்கும் நிகழ்வொன்றில் பேசுகையிலேயே இந்து சமய அலுவல்கள் விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் - நான், அடுத்தமுறை இடம்பெறும் நாடாளுமன்றத் தேர்தலில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடாநாட்டிலும் இன்று முதல் அரச வைத்தியர் வேலைநிறுத்தம்!

### அவசர சிகிச்சைகள் மட்டும் நடைபெறுமென அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து நாடுமுழுவதும் அரசாங்க வைத்திய அதிகாரிகளாகப் பணியாற்றும் மருந்துவர்கள், இன்று முதல் வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

அரசாங்க மருத்துவர் சங்கம் நடத்தும், இந்தப் போராட்டம் யாழ். மாவட்டத்திலும் இடம்பெறவுள்ளதாக- அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ்.மாவட்டச் செயலாளர், வைத்திய கலாநிதி எஸ்.குமரவேள் தெரிவித்தார்.

அரசாங்க வைத்திய அதிகாரிகளுக்கான சம்பள முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் வடக்கு- கிழக்கில் பணியாற்றும் சகல வைத்தியர்களுக்கும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்-முஸ்லிம்களின் காணிப் பிரச்சினைகள் அம்பாறை மாவட்டக் குழுக் கூட்டம் இன்று!

(கல்முனை)

தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையிலான காணிப்பிரச்சினைகள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட, அம்பாறை மாவட்டத்துக்கான குழுவின் கூட்டம் இன்று அம்பாறையில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்தக் கூட்டம்-அம்பாறை மாவட்டப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதி கார்ள் சேர்பாக் முன்னிலையில் நடைபெறும். புலிகள் தரப்புக்குழுவுக்கு மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷும், முஸ்லிம்களின் தரப்புக்கு எம்.ஐ.எம். முகைதீனும் தலைமை வகிப்பர்.

அம்பாறை மாவட்டத்தை நான்கு வலயங்களாகப் பிரித்து, தமிழ் - முஸ்லிம் மக்களின் காணிப் பிரச்சினைகள் தொடர்பாக கடந்த கூட்டத்தில் ஆராயப்பட்டது. இந்தக் கூட்டங்களில் இனங்காணப்பட்ட பிரச்சினைகள் குறித்து, மாவட்ட மட்டக்குழுவின் கூட்டத்தில் ஆராய்ந்து தீர்மானம் எடுக்கப்படும்.

மாவட்ட மட்டக் குழுவின் முதலாவது கூட்டம் கடந்த மாதம் 7 ஆம் திகதி இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (07)

# "அதே இடத்தில் சேவை" நிகழ்வில் 733 பேருக்கு பிறப்புச் சான்றிதழ்கள்!

யாழ் செயலகத்தில் - கடந்த சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்ற -பதியப்படாத பிறப்பு, இறப்புக்களை பதிவுசெய்வதற்கான 'அதே இடத்தில் சேவை' நிகழ்வில், காலங்கடந்த பதிவுகளுக்காக 2537 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டதாக, யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இடம்பெயர் சேவையில்-யாழ்.மாவட்டத்தில் காலங்கடந்த பிறப்புகளைப் பதிவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 1729 விண்ணப்பங்களில் 733 விண்ணப்பங்களுக்கு, உடனடியாகப் பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. வேறு மாவட்டங்களில் பிறந்த - காலங்கடந்த பதிவுகளுக்காக 180 விண்ணப்பங்களும், வெளிநாடுகளில் பிறந்தவர்களுக்காக 36 விண்ணப்பங்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

காலங்கடந்த மரணங்களைப் பதிவதற்காக 108 விண்ணப்பங்களும், காணாமற்போனவர்களைப் பதிவு செய்வதற்காக 29 விண்ணப்பங்களும் கையளிக்கப்பட்டன.

திருமண, பிறப்பு, இறப்புக்களைப் பதிவதற்காக வழங்கப்பட்ட 460 விண்ணப்பங்களில், 262 விண்ணப்பங்களுக்குப் பதிவு இலக்கங்கள் வழங்கப்பட்டன. பதிவு இலக்கங்கள் வழங்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு மூன்று நாட்களில் சான்றிதழ்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### சட்டவிரோத மின் பாவனை அதிகரிப்பு

கதிரிப்பாய், தம்பாலை, இடைக்காடு ஆகிய பகுதிகளில் - சட்டவிரோத மின்பாவனையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களுக்குப் புகார் தெரிவிக்கப்பட்ட போதும், எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது. (76)

# திருகோணமலையில் நடைபெற்ற மாகாணமட்ட உடற்பயிற்சிப் போட்டி



இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய மாணவிகளின் உடற்பயிற்சி.

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கு மாகாண மட்ட உடற்பயிற்சிப் போட்டிகள் நேற்று முன்தினம், திருகோணமலை கெய்சர் ஸ்ரேடியத்தில் நடைபெற்றன. இந்தப் போட்டிகளில் - 23 பாடசாலைகளைச் சேர்ந்த 500 மாணவர்கள் பங்குபற்றினர்.

மாகாண மட்டத்திலான உடற்பயிற்சிப் போட்டியில் - பெண்கள் பிரிவில்-வவுனியா இரம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயமும், ஆண்கள் பிரிவில் - ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயமும் முதலாம் இடங்களைப் பெற்றுக்கொண்டன.

அணிநடைப் போட்டியில், ஆண்கள் பிரிவில் - முல்லைத்தீவு, கொக்கிளாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும், பெண்கள் பிரிவில்- திருகோணமலை மெதடிஸ்ட் பெண்கள் கல்லூரியும் முதலாம் இடங்களைப் பெற்றுக்கொண்டன.

இந்த நிகழ்வுக்கு வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். வெற்றிபெற்ற மாணவர்களுக்கு திருமதி மகாலிங்கம் பரிசுகளை வழங்கினார்.




யாழ் நகரில் இணையசேவை
(BROWSING CENTRE)

INTERNET மூலம்
உங்கள் இல்லங்களிலிருந்தே
உறவுகளோடு உரையாடி
உணர்வுகளை பகிர்ந்து கொள்ளலாம்

மேலும் அமைதியான சூழல்
அன்பான உபசரிப்பு
தெளிவான ஒலி
குறைந்த கட்டணம்

நாமுமிகளி

Sri Murugan
Computer Systems, Sommunication Services
& Agency Post Office
303, k.k.s Road, Jaffna.

T.Phone : 021-2222670, 2223588
Fax : 021-2223214
Email :del-smskr@eureka.lk. (சி-1072)



Association for Rehabilitation of the Disabled (AROD)
47/2, Adiyapatham Road, Thirunelvely North, Jaffna.

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்
47/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தால் மிதிவெடி, வெடிபொருட்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சுயமுயற்சிக்கடன் வழங்கல் திட்டம்.

மிதிவெடி மற்றும் வெடிபொருட்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு - தொழில் முகாமைத்துவமும், தொழில்சார் பயிற்சியும், தொழில் ஆரம்பிப்பதற்கான கடன் உதவியும் வழங்க ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் (AROD) எண்ணியுள்ளது. இதன் இரண்டாம் கட்டமாக வடமராட்சி பிரிவில் உள்ள பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளில் நிரந்தரமாக வசிக்கும் பாதிப்புற்றவர்கள் இம்மாதம் 11, 12, 13 ஆம் திகதிகளில் காலை 10.00 - 2.00 மணிவரை நேரடியாக வந்து தொடர்புகொள்ளவும்.

*உங்கள் தொடர்புக்கு:*

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்,
தொழில் பயிற்சி மையம்,
இலகடி,
("சதா பொன்ஸ்" கல்வி நிலையம் அருகில்)
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

(சி-1071)


### மே மாதத்தில் 1714 பேருக்கு சிகிச்சை

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்கில் உள்ள தியாக தீபம் திலீபன் மருத்துவமனையில், கடந்த மே மாதத்தில் மாத்திரம்- வெளிநோயாளர் பிரிவில் 1714 பேர் சிகிச்சை பெற்றுள்ளதாக, திலீபன் மருத்துவமனைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (122)

### சப்பறத் திருவிழா

தொல்புரம் மத்தி, கொட்டியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்து மாரியம்மன் ஆலய சப்பறத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.


பாலைவனச் சோலை ஊழியம் நடத்தும்

இயேசுவின் இன்பப் பெருவிழா

| இடம் | திகதி | நேரம் |
| --- | --- | --- |
| மானிப்பாய் செல்லமுத்து மைதானம் | ஆனி (ஜூன்) மாதம் 12, 13, 14, 15 | பிற்பகல் 4.30 மணி |



தேவ செய்தியாளர் :
சகோதரி. பத்மா முதலியார்

சிறப்புப் பாடல்கள்:
சகோ. ஜான்ஜெபேஸ் & குழுவினர்

பாவம், வியாதி, பில்லி சூனியம், கடன் பாரம் இவைகளிலிருந்து உடனே விடுதலைபெற குடும்பமாக வாருங்கள்!

கூட்ட முடிவில் எண்ணெய் இலவசமாக வழங்கப்படும்.

குறிப்பு: ஆனி (ஜுன்) மாதம் 13, 14, காலை 9.30 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் ஊழியர்கள் விசுவாசிகளுக்கான வேதபடிப்பு நடைபெறும்.

இயேசு இன்றும் அற்புதம் செய்கிறார் !

அனுமதி இலவசம்!!

(சி-1073)

தொடர்பு - யாழ். குடா ஊழியர் ஐக்கியம் 222-3653, 222-2930, 222-3286



நிறஞ்சனாஸ் சங்கானை
விஜய், சாலினி, தாமு, ராதாரவி நடித்த
காதலுக்கு மரியாதை
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு. 8.45 (பு.நே)
The Rock The scorpion king
(சி-974)



ராஜா யாழ்ப்பாணம்.
சில தினங்கள் மட்டும்
அஜித்,
வசுந்தராதாஸ்,
மீனா. நக்மா
சிட்டிசன்

# இம்முறை சமாதானப் பேச்சு முறிந்தால் இறுதி இராணுவச் சமரிலேயே சந்திப்பு!

## மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ்



(மட்டக்களப்பு)

**தற்போதைய சமாதானப் பேச்சுக்களை அரசு இழுத்தடிப்பதுபோல் தெரிகிறது. இதனால், இப்பேச்சுக்கள் ஒருவேளை தோல்வியுற்றால் இனியொரு பேச்சுக்கு இடமேயில்லை. இறுதி இராணுவச் சமரிலேயே நாம் சந்திக்க வேண்டி நேரிடும்.**

**- இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறைப் பிராந்திய சிறப்பு இராணுவத் தளபதி த.ரமேஷ், வீரமுனையில் கணினிப் பயிற்சி நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.**

தளபதி ரமேஷ் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது -

சந்திரிகா - ரணில் அதிகாரப் போட்டியினால் பாதிக்கப்படுவது தமிழர்களின் வீரவரலாறும், தமிழர்களின் பெருமையும்தான். தமிழர்களுக்கான தீர்வைத் தள்ளிப்போடும் ஓர் உபாயமாகவே இவர்களது இழுபறியைக் கருதவேண்டியுள்ளது.

எமது நாட்டுப் பிரச்சினைக்குச் சமஷ்டி ஒரு நல்ல தீர்வு என, உலக நாடுகளே சொல்கின்றன. ஆனால், இலங்கையின் அரசமைப்பில் சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லைப்போல் தெரிகிறது.

பேச்சு என்ற போர்வையில் காலத்தைக் கடத்தும் நிலையை இங்கு காண்கிறோம். அரசமைப்புத் திருத்தம் என்றாலும், நாடாளுமன்றத்தில் மூன்றில் இருபங்கு பெரும்பான்மை பலம் வேண்டும். அப்படி நிறைவேற்றப்பட்டாலும், மக்கள் தீர்ப்பு என்று இழுத்தடிப்பார்கள்.

மொத்தத்தில் காலம் இழுத்தடிக்கப்படுகிறது. இன்றைய பேச்சுக்கள் தோற்றால் இனி சமரில்தான் சந்திப்பு. மீண்டும் ஒரு சண்டையை ஆரம்பிப்பதா, இல்லையா என்பது நோர்வேயிடமோ அல்லது வேறு வெளிநாடுகளிடமோ தங்கியிருக்கவில்லை. முழுமையாக, இலங்கை அரசில் மட்டும்தான் அது தங்கியுள்ளது.

சீறான் என்று பேசினார்கள். இன்று சிறானின் கதையே இல்லை. அண்மையில் பிரதமர் ரணிலின் நிதியிலிருந்து சிறுதொகையை ஒதுக்கி, 4 குளங்களைப் புனரமைக்கத் திட்டமிட்டதாகத் தெரிகிறது. இப்படியான ஏமாற்று வேலைகளுக்கு எடுபட நாம் தயாரில்லை.

இருபது வருடங்களில் 80 ஆயிரம் பொதுமக்களையும், 17 ஆயிரம் மாவீரர்களையும் இழந்தது இவைகளுக்காகவா? எம்மை ஏமாற்ற இடமளியோம். பேச்சு மேசையில் பேசப்பட்ட விடயங்கள் நிறைவேற்றப்படவில்லை.

இதனிடையில் சதீஸ் நம்பியார் எம்மிடம் இருக்கும் கனரக ஆயுதங்களைக் களையுமாறு கேட்கிறார். 80 ஆயிரம் பொதுமக்கள் வீணாக அழிக்கப்பட்டார்களே, அதற்கு யாரிடம் போய் நியாயம் கேட்பது?

அம்பாறை மாவட்டத்தில் நிறைய வளங்களுண்டு. அவற்றைப் பயன்படுத்திப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவேண்டும். ஜப்பான் தொழில்நுட்பத்தில் முன்னேறியது எப்படி? அங்கு எந்தத் தொழில்நுட்பமும் முன்னர் இருக்கவில்லை. மாறாக, வெளிநாடுகளிலிருந்து தொழில்நுட்ப அறிவைப்பெற்று அது முன்னேறியது.

ஜப்பானைவிடத் தமிழீழத்தில் நிறைய வளங்களுண்டு. சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில் மின்னல் வேகத்தில் நாம் அபிவிருத்தி செய்ய முடியும்.

நாட்டிலே நிரந்தரத் தீர்வு வரும் வரையில் சிறு சிறு பிரச்சினைகள் வந்தேதீரும். அதையிட்டு யாரும் அலட்டத் தேவையில்லை. விடுதலைப் போரில் வீரமுனைக் கிராமம் பாரிய பங்களிப்பைச் செய்துள்ளது. பல அழிவுகளைச் சந்தித்துள்ளது. ஆலயத்துள் வைத்து தமிழ் மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். தமிழர்கள் கிராமம் கிராமமாக அழிக்கப்பட்டார்கள். தமிழர் கிராமங்கள் சூறையாடப்பட்டன, எரியூட்டப்பட்டன. அவற்றின் விளைவே தமிழீழப் போராட்டம். ஐ.நா. சாசனத்தின்படி ஓர் இனம் அடக்கி ஒடுக்கப்படும்போது, அது பிரிந்துநின்று தனிநாடு அமைக்க உரிமையுண்டு.

தமிழரின் தியாகம், நெறிப்படுத்தப்பட்ட யுத்தம் என்பவற்றுக்கூடாக இன்று ஒரு சமாதானம் வந்துள்ளது. இதனைத்தக்க வைத்துக்கொள்ளும் பொறுப்பு அரசையே சார்ந்தது.

தமிழினத்தை அழித்துவிடலாமென்ற நோக்கில், சிங்களப் படை கொடிய போரை எம்மீது திணித்தது. தலைவரின் சீரிய வழிகாட்டலில் நாம் வன்னியை மீட்டோம். சிங்களப் படையைத் துரத்தியடித்தோம் - என்றார் அவர்.

இக்கூட்டத்தில் அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

### அழுகிய நிலையில் சடலம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கடற்பகுதியிலிருந்து அழுகிய நிலையில் மீட்கப்பட்ட ஆணின் சடலம் ஒன்று ஊர்காவற்துறை பொலிஸாரினால், நேற்றுமுன்தினம் நள்ளிரவு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச,க)

### கைலாசபதி விருதுக்கு தயாபரன் தெரிவு

(யாழ்ப்பாணம்)

பத்திரிகை ஆசிரியர் பேரவையின் 2002 ஆம் ஆண்டுக்கான, சிறந்த பத்திரிகையாளர்களுக்கான விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

விசேட சூழ்நிலையில், துணிச்சலுடன் பணியாற்றியமைக்கான கைலாசபதி விருது - தினக்குரல் செய்தியாளர் தயாபரனுக்கு வழங்கப்படவுள்ளது.

விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் 24 ஆம் திகதி மவுண்ட் லவனியா ஹோட்டேலில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### சுயதொழில் உற்பத்தியாளருக்கு கடன்வசதி

(சரசாலை)

தென்மராட்சிப் பிரதேசத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சுயதொழில் உற்பத்தியாளர்களுக்கு ஐ.நா.உதவியுடன் கடன் வழங்கப்படவுள்ளதாக, தென்மராட்சி ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான கூட்டமொன்று இன்று பி.ப. 2.30 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலத்திலும், பி.ப. 3.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. (34)



ரோக்கியோவில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறும் அகாஸ்கா ஹோட்டேலுக்கு முன்பாக தீவிரப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு.

# தேசிய அரசாங்கம் அமைக்கும் யோசனையா? தனக்கு எதுவுமே தெரியாது என்கிறார் கதிர்காமர்!

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தின் பிரதமராக தன்னை நியமிக்கும் திட்டம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இருப்பதாக, வெளியான செய்திகள் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசு அமைப்பதற்கும் - அதில் பிரதமராக லக்ஷ்மன் கதிர்காமரை நியமிப்பதற்கும் ஜனாதிபதி சந்திரிகா விரும்புவதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன. இந்தச் செய்திகள் குறித்து கருத்து வெளியிட்டபோதே, கதிர்காமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எந்தக் காலத்திலும் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து தேசிய அரசு அமைக்காது. சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களும்சரி, பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவர்களும்சரி, ஜே.வி.பியுடன் கூட்டணி அமைப்பதையே விரும்புகின்றனர்.

தேசிய அரசு பற்றி எப்போதுமே பேசப்பட்டு வந்திருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தல் நடந்த காலத்தில் இருந்தே, தேசிய அரசு பற்றிய பேச்சு வாடிக்கையாகிவிட்டது.



ஆனால், அவ்வாறு இரு கட்சிகளும் இணைந்து தேசிய அரசு அமைப்பது சாத்தியமல்ல. ஐக்கிய தேசிய முன்னணி அரசே இதற்கு முனைப்புக்காட்டுகிறது.

ரோக்கியோவுக்குப் புறப்பட முன்னர், இது குறித்துப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்னுடன் பேசியிருந்தார். ஜனாதிபதிக்கு எதிராகவும், பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களுக்கு எதிராகவும் செயற்பட்டுவரும் ஐக்கிய தேசிய முன்ன்ணியுடன், எவ்வாறு இணைந்து தேசிய அரசு ஒன்றை அமைக்கமுடியும் என்றும், லக்ஷ்மன் கதிர்காமர் மேலும் கேள்வி எழுப்பினார்.

# பொ.ஐ.முவிலுள்ள கட்சிகளுடன் சந்திரிகா கலந்துரையாட முடிவு!

## ஜே.வீ.பியுடனான கூட்டணி பற்றிப் பேசுவார்

(கொழும்பு)



ஜே.வி.பியுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைக்கவுள்ள கூட்டணி குறித்து - பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம்வகிக்கும் ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடவிருப்பதாக - பொ.ஐ.முவின் பொதுச் செயலாளர் டி.எம்.ஜெயரட்ண தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி இடையிலான கூட்டணி குறித்து பொ.ஐ.முவில் அங்கம்வகிக்கும் கட்சிகளுக்கு விளக்கமளிக்க ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளார்.

அத்துடன், இனப்பிரச்சினை தொடர்பான இன்றைய நிலைப்பாடுகள் குறித்தும் கூட்டணிக்கட்சிகளுடன் கலந்துரையாட ஜனாதிபதி சந்திரிகா விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பொ.ஐ.முவில் இடம்பெற்றுள்ள லங்கா சமசமாசக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன ஜே.வி.பியுடன் - சுதந்திரக்கட்சி கூட்டணி அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# சமாதானப் பேச்சுக்களில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை என கூறமுடியாது!

## ஜப்பானிய விசேட தூதுவர் அகாஷி

(கொழும்பு)

கடந்த காலத்தில் இடம்பெற்ற அரசு - புலிகள் பேச்சுக்கள் எந்த முன்னேற்றத்தையும் எட்டவில்லை என்று கூறமுடியாது. பல முக்கிய முன்னேற்றங்களை அது கண்டிருப்பதாக, ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசுஷி அகாஷி தெரிவித்துள்ளார்.

ரோக்கியோவிலுள்ள முற்பாதுகாப்பு இராஜதந்திர மையத்தின் **(Center for Preventive Diplomicy)** சிந்தனை வட்டத்தின் தலைவராக உள்ள யசுஷி அகாஷி ஜப்பானியப் பிரதமர் ஜானசிறோ கொய்சுமிக்கு நெருக்கமான இராஜதந்திரி ஆவார்.

சமாதானப் பேச்சுக்களில் எட்டப்பட்ட முன்னேற்றங்கள் குறித்து கருத்து வெளியிட்ட அகாஷி -

ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஷ்டி ஆட்சி முறையைப் புலிகள் தேடுவது இந்தச் சமாதானப் பேச்சுக்களில் இருந்து தெரியவந்துள்ளது.

மனித உரிமை விடயங்களில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது. சிறுவர்களைப் படையில் சேர்ப்பது நிறுத்தப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மீளக் குடியமர்ந்துள்ளனர்.

புலிகள் இந்தச் சமாதானப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்கின்றார். அதனையும் மறுக்க முடியாது.

போர்நிறுத்தம் கண்காணிக்கப்படுகிறது. கடலில் சண்டைகள் நடந்தாலும், கண்காணிப்புக்குழுவை இனனும் வலுப்படுத்த வேண்டும் என்ற கருத்து எழுந்துள்ளது. கிராமங்களுக்கு இப்போது சடலங்கள் செல்வது குறைந்துவிட்டது.

இவையெல்லாம் பேச்சுக்களின் மூலம் நடந்துள்ளதால், ஆறுமாதங்கள் இடம்பெற்ற பேச்சுக்கள் கால விரயமல்ல என்றே கருதுகின்றேன்.

எதிர்காலத்தில் அரசு - புலிகள் பேச்சுக்களில் பிரச்சினைக்குரிய விடயங்களில் தீர்வுகள் காணப்படும் என்ற நம்பிக்கை உள்ளது.

சர்வதேச சமூகமும் அமைதி முயற்சிக்குத் தீர்வு காண்பதையே விரும்புகின்றது. ரோக்கியோ மாநாடு நல்ல விளைவுகளைத் தரும் என்ற நம்பிக்கை உள்ளது.

ரோக்கியோவுக்குப் புலிகளை வருமாறு நாம் கெஞ்சவில்லை. அவர்களுக்கு அழைப்பு விடுத்தோம். ஆர்வமிருந்தால் கலந்துகொள்ளுமாறு கேட்டோம் என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

## சின்னஞ் சிறு செய்திகள்

### சிறுவர்களுக்கு இலைக்கஞ்சி

(கொடிகாமம்)

சிறுவர் போஷாக்குத் திட்டத்தின்கீழ், மட்டுவில் பகுதியிலுள்ள பத்து முன்பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு, இலைக்கஞ்சி வழங்கப்படவுள்ளதாகச் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (36)

### பொங்கல் விழா

(வடமராட்சி)

தென்புலோலி, மந்திகை கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல்விழா எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும் என, ஆலய பரிபாலன குருக்கள் தெரிவித்தார். (17)

### மாநகரசபை பணியாளருக்கு மரதனோட்டம்

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, யாழ்.மாநகரசபை ஆண் பணியாளர்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள், ஊழியர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன. இம்மரதன் ஓட்டப் போட்டி 5 மைல் தூரம் கொண்டதாக இருக்கும். விண்ணப்ப இறுதித்தினம் 25 ஆம் திகதியாகும். போட்டிகள் எதிர்வரும் ஜுலை மாதம் 13 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் என மாநகர விளையாட்டுத் துறை அறிவித்துள்ளது. (13)

### பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

(நவிண்டில்)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும், விவசாயக் குழுக் கூட்டமும் இன்று காலை 10 மணிக்கும், 11.30 மணிக்கும் நடைபெறவுள்ளது. இதில் உள்ளூர் திணைக்களத் தலைவர்களையும், ஏனைய நிறுவனப் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (116)

### கிளிநொச்சியில் அத்தியாவசிய குழுக் கூட்டம்

(கொக்குவில் மேற்கு)

கிளிநொச்சிப் பிரதேச அத்தியாவசிய குழுக்கூட்டமும், விவசாயக் குழுக்கூட்டமும் இன்று பிற்பகல் 2 மணிக்கு - கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தில் நடைபெறவுள்ளதாக அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார். (108)

### நூல் வெளியீட்டு விழா

(பாஷையூர்)

மு.சிங்கராயர் எழுதிய 'கூவிப் பறந்த கோகிலங்கள்' நூல் வெளியீட்டுவிழா, எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்குப் பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### யாழ். பிராந்திய ஆணையாளராக பத்மினி

(அரியாலை)

வடக்கு - கிழக்கு மாகாணசபையின் யாழ். பிராந்திய ஆணையாளராக பத்மினி சிவலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். இவர், முன்னர் யாழ். செயலக திட்டமிடல் பகுதிகளிலும், திருகோணமலை சுகாதாரத் திணைக்களத்திலும், பின்னர் வட - கிழக்கு மாகாணசபையின் திட்டமிடல் பிரிவிலும் பணியாற்றி வந்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண பிராந்திய ஆணையாளராக இதுவரை காலமும் ஒப்பந்த அடிப்படையில் பதவிவகித்த கலாநிதி க.குணராசாவின் பதவிக்காலம் முடிவடைந்ததால், அவருக்குப் பதிலாகவே மேற்படி பதவிக்கு இவர் நியமனம் பெற்றுள்ளார். (55)

### விசாகப் பொங்கல்

கோண்டாவில் அருட்திரு கேணியடி காளிஅம்பாள் ஆலயத்தில், வைகாசி விசாகத்தை முன்னிட்டு நாளை அம்பிகை வீதியுலாவும், நாளைமறுநாள் விசேட பூசையும், பொங்கல் விழாவும் இடம்பெறவுள்ளது.

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

நாலாவது அகவையில்

பெயர் - இ.மீரா
முகவரி - 'சோதி மகால்', நவிண்டில்.



ஆறாவது அகவையில்



பெயர் - ம.தனுசங்கர்
முகவரி - மாரியம்மன் வீதி, திருநெல்வேலி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-----------------------------------
முகவரி :-----------------------------------
பிறந்த ஆண்டு:-----------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
-----------------
பெற்றார் ஒப்பம்

# வன்னிப்பகுதி விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவில் அசமந்தம்!

## சந்தைப்படுத்த முடியாமல் திண்டாடுகின்றனர்

(ஆழியவளை)

வன்னிப் பிரதேசத்தில் - நெல் கொள்வனவில்- அரசு, அரசுசார்பற்ற நிறுவனங்கள் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிப்பதால், உற்பத்தி செய்யப்பட்ட நெல்லை, சந்தைப்படுத்த முடியாமல் விவசாயிகள் அல்லற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சீரான விலை நிர்ணயம் இல்லாமை, இந்த நிறுவனங்கள் முழுமையாக நெல்லைக் கொள்வனவு செய்யாமை - போன்ற காரணங்களால், விவசாயிகளால் காலபோகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட நெல், சந்தைப்படுத்தப்படாமல் உள்ளது.

இதன்காரணமாக- சிறுபோக நெற்செய்கையினை மேற்கொள்வதற்கு, நிதிநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

எனவே, காலபோக நெல்லினை சந்தைப்படுத்துவதற்கு ஏற்ற வசதிகளைச் சம்பந்தப்பட்டவர்கள் செய்துதரவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (122)

### காரைநகரில் பொங்கல் விழா

(காரைநகர்)

காரைநகர் திண்ணபுரம் சிவன் கோவில், தினகரன் பிட்டி வைரவர் கோவில் பொங்கல்விழா நாளை மறுநாள் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில்

## ஆசிரியர் பற்றாக்குறையால் கல்விப் பணிகள் பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில், ஆசிரியர் பற்றாக்குறை பெருமளவு காணப்படுவதன் காரணமாக- கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளில் பல இடையூறுகளை எதிர்நோக்குவதாக முல்லைத்தீவு வலயக் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த மாவட்டத்தில், 1004 ஆசிரியர்கள் இருக்கவேண்டிய நிலையில், 506 ஆசிரியர்களே கடமை புரிகின்றனர். இந்தப் பாரிய இடைவெளியைத் தொண்டர் ஆசிரியர்களே நிறைவேற்றி வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கல்வி நிலை மேம்படவேண்டுமானால், ஆசிரியர் பற்றாக்குறை நீக்கப்பட வேண்டியது மிகவும் முக்கியமானதாகும் என திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (122)

### ஒட்டுவேலை செய்வோரால் பொதுமக்களுக்கு பாதிப்பு

(கொடிகாமம்)

சாவகச்சேரி நகரப் பகுதியில் இரும்பு ஒட்டுவேலை செய்பவர்கள், வீதியோரங்களில் வைத்து ஒட்டுவேலைகளைச் செய்வதால் - அவ் வீதியால் போக்குவரத்துச் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது. (36)

## ஒரு வெளியிணைப்பு இயந்திரத்துடனேயே கடலில் தொழிலுக்குச் செல்லமுடியும்!

### வல்வை மீனவருக்குப் படையினர் கட்டுப்பாடு

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை மற்றும் ஆதிகோயிலடி மீனவர் சங்கங்களை, ஒரு வெளியிணைப்பு இயந்திரம் மட்டும் பொருத்தி, தொழிலில் ஈடுபடவேண்டும் என்று வல்வெட்டித்துறை இராணுவத்தினர் உத்தரவிட்டுள்ளனர்.

ஆனால், தற்போது வீசும் கடும் காற்றினால் - ஒரு வெளியிணைப்பு இயந்திரத்தை மட்டும் பொருத்தி, தொழிலில் ஈடுபடமுடியாதுள்ளதாக அப்பகுதி மீனவர்கள் - யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதன் பின்னர், இரண்டு வெளியிணைப்பு இயந்திரங்களைப் பொருத்தி, மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது. (124)

## 42 பாடசாலைகளில் ஜி.ரி. இசற் மலசலகூடங்களை அமைக்கும்!

(ஆழியவளை)

யாழ்.மாவட்டத்தில் போரினால் பாதிப்புற்ற 42 பாடசாலைகளுக்கு, ஜி.ரி.இசற் நிறுவனம் மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவுள்ளது. இத்திட்டத்திற்கென இவ் வருடம் சுமார் 1 கோடியே 50 லட்சம் ரூபாவைச் செலவிடவுள்ளது.

இத்திட்டத்தில் - சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 27 பாடசாலைகளும், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 10 பாடசாலைகளும், தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 3 பாடசாலைகளும், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 2 பாடசாலைகளும் சுகாதார வசதிகளைப் பெறவுள்ளன.

இந்தவகையில் ஆண்களுக்கான 14 சலகூடங்களும், பெண்களுக்கான 20 சலகூடங்களும், ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான 22 சலகூடங்களும், 38 மலகூடங்களும், 55 நீர்த்தாங்கிகளும் ஜி.ரி. இசற் நிறுவனத்தினால் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. (122)

### இறுதிப்போட்டிக்கு தெரிவு

வடமராட்சி வலய பாடசாலைகளுக்கு இடையிலான சங்ஸ்தா உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும், தேவரையாளி இந்துக் கல்லூரியும் மாவட்ட மட்ட இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன.

### கணினிப் பயிற்சிநெறி

(காரைநகர்)

இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடன், வல்லிபுர ஆழ்வார் ஆலய அறங்காவலர் சபையினரால் எதிர்வரும் 12 ஆம் திகதி மந்திகைப் பிரதேசத்தில் கணினிப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. (52)

### கண்ணிவெடி விழிப்புணர்வு நேர அட்டவணை

(ஆழியவளை)

வன்னிப்பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு, கண்ணிவெடி விழிப்புணர்வூட்டும் நேர அட்டவணைகள் யுனிசெப் நிறுவனத்தினரால் வழங்கப்பட்டுள்ளன.

கண்ணிவெடி விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் 286 பாடசாலைகளைச் சேர்ந்த 64,400 மாணவர்களுக்கு இந்த நேர அட்டவணைகள் வழங்கப்பட்டதாக, மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தெரிவித்தனர். (122)

## பளை வைத்தியசாலைப் பகுதியில் தொடர்ந்து பொதுமக்கள் சிரமதானம்

### புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகவில்லை

(பளை)

பளை வைத்தியசாலையை மீள இயங்க வைப்பதற்காக, இப்பிரதேமக்கள் தொடர்ந்தும் வைத்தியசாலைப் பகுதிகளில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தொடரும் சிரமதானப் பணிகளில், நேற்றுமுன்தினம் பளை வர்த்தகர் சங்கத்தைச் சேர்ந்த 50 பேர் வரையில் ஈடுபட்டிருந்தனர்.

ஏ-9 பாதை திறக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியான பின்னரும், பளை வைத்தியசாலை திறக்கப்படாமல் இருப்பது- இப்பகுதி மக்கள் குறித்து, பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் அக்கறை இன்றி இருப்பதையே வெளிப்படுத்துவதாக மக்களால் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர், மருதங்கேணி வைத்தியசாலை புனரமைக்கப்படும்போது - பளை வைத்தியசாலையைப் புனரமைப்பதில் தாமதம் காட்டுவது குறித்து இப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர். (115)

## நெடுந்தீவுப் பிரதேசத்தில் விளையாட்டுப் போட்டிகள்

நெடுந்தீவு விளையாட்டுக் கழகங்களின் சமாசத்தினால் நடாத்தப்பட்டுவரும் விளையாட்டு நிகழ்வில், எதிர்வரும் வெள்ளிக்கிழமை- பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியும், சனிக்கிழமை - நீச்சல், படகோட்டம், வண்டிச்சவாரியும், ஞாயிற்றுக்கிழமை - உதைபந்தாட்டமும், பெண்களுக்கான கிரிக்கெட்போட்டியும் நடைபெறவுள்ளன.

கடந்தவாரம் நடைபெற்ற எல்லே மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகளில், சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. (113)

## திரை விமர்சனம்

# லேசா லேசா

சிறைச்சாலை, கோபுரவாசலிலே போன்ற நல்ல தமிழ்ப் படங்களைத் தந்த மலையாள இயக்குநர் பிரியதர்ஷன் இயக்கிய படமே லேசா லேசா.

மலையாளத்தில் 'சம்மர் இன் பெத்லஹேம்' என வெளிவந்த திரைப்படமே லேசா லேசாவாக உருமாறியிருக்கிறது.



மலைவாசல் தலமான ஊட்டியில் ஆரம்பிக்கும் கதை - விவேக்கின் தாத்தாவான ராதாரவி, தன் ஐந்து பேத்திகளுடன் விடுமுறையைக் கழிக்க வந்திறங்கியதும், வேகம் எடுக்கிறது.

ஐவரிலும் த்ரிஷா தான் தாத்தாவுக்கு நெருக்கமான பேத்தி. த்ரிஷாவுக்குள்ளும் ஒரு இரகசியம். அது தாத்தாவுக்கோ, வேறு யாருக்குமோ தெரியாது. அதுதான் கதையின் முடிச்சும்கூட.

இந்தக் கும்பல் வந்திறங்கும் மாளிகைக்கு உரிமையாளராக - உறவினர் யாருமற்று வாழ்ந்துவரும் கதாநாயகன் ஷாம், த்ரிஷாவைக் காதலிக்கத் தொடங்கும் போது, அந்த இரகசியம் குறுக்கிடுகிறது.

தான் ஏற்கனவே மாதவனுடன் திருமணமானவள் என்பதை ஷாமுக்கு - த்ரிஷா சொல்லியதும், திரைப்படத்தின் முடிவுவரை காட்சிகள் விறுவிறுப்பாக நகர்கின்றன.

முடிவு- வழக்கமான தமிழ்த் திரைப்பட இலக்கணங்களை மீறவில்லை. த்ரிஷா தன் குடும்பத்துடன் ரயிலில் புறப்பட்டுப்போக, ஷாமைக் காத்திருக்க வைத்து, திரைப்படத்தின் முடிவை ஒரு திறந்தநிலைக்கு (**Open ending**) வைத்திருந்தால், இந்தப் படம் மனதில் பதிந்திருக்கும்.



ஆனால் - சுபமுடிவைத் தேடி சறுக்கிவிடுகிறார் பிரியதர்ஷன். படத்தில் முக்கியமாகச் சொல்ல வேண்டியது கலைதான். அற்புதமான மரத்தாலான கட்டடங்கள், சுவாரசியமான பண்ணைப்புறம் (மேற்கத்தியப் பாணியின் பாதிப்பு இருந்தாலும்), அழகான கிராமம் - நகரம் இன்றிய இரண்டும் கெட்டான் சூழல் அனைத்தையும் உருவாக்கிய சாபு சிறிலுக்குப் பாராட்டுக்கள்.

ஹரீஸ் ஜெயராஜ்ஜின் இசை, திருவின் ஒளிப்பதிவு சொல்லும்படியாக இருக்கின்றன. நடிப்பில் த்ரிஷா, மாதவன் கலக்குகின்றனர். ஷாமும் அமைதியான ஆழத்தனமான - ஆனால், நடிப்பதற்கு வாய்ப்பற்ற பாத்திரம்.

நகைச்சுவையில் விவேக்குடன் இணைந்து மலையாள நடிகர் ஸ்ரீனிவாசன் வயிறு குலுங்க வைக்கிறார்.

இந்தப் படத்தில் முடிவைத்தான் மூடநம்பிக்கையற்ற ஹீரோயிசம் சற்றுக் குறைவான - ஓரளவு யதார்த்தமான படைப்பைத் தந்ததற்குப் பிரியதர்ஷனுக்கு நன்றி சொல்லலாம்.

## மஞ்சுச் சிகரம்
பல்சுவை அரங்கு

# கடற்கரைக்கு நீலக்கொடி

**பி**ரிட்டனில் இவ்வாண்டு சுத்தம்பேணுதலுக்கான விருதை 105 கடற்கரைகள் பெற்றுள்ளன. விருதாக இவற்றுக்கு நீல நிறக்கொடி வழங்கப்பட்டது. இத்தொகை 2000 ஆம் ஆண்டிலும்விட, இரட்டிப்பானது எனக் கூறப்படுகிறது. வேல்ஸ் பிராந்தியத்திலேயே அநேகமான கடற்கரைகளில்- 33 கடற்கரைகள் விருதைப்பெற்றுள்ளன. சிறந்த சுகாதார - நீர் - விருந்தினர் நிர்வாகத்தை இவை பேணியதாகப் பாராட்டப்பட்டுள்ளது.



பிரிட்டனைச் சுத்தமாகப்பேணும் சுற்றாடல் பிரசார இயக்கமான, 'எம் காம்ஸ்', இந்த நீலக்கொடி விருது வழங்குகிறது. 1987 ஆம் ஆண்டுமுதல் இவ்விருது வழங்கப்படுகிறது. இவ்வாண்டில் 14 பிரிட்டிஷ் கடற்கரைகள் விருதைப் பெற்றிருந்தன. விருதைப் பெற்றவர்கள் குளியல் சீசனில் தமது கடற்கரைகளில், இந்த நீலக் கொடியைப் பறக்கவிடுவதைப் பெருமையாகக் கருதுகின்றனர்.

பிரிட்டன் தனது கடலோரத்தைப் பாதுகாக்கும் ஆர்வத்தை அதிகரித்து வரும் அதேவேளை- அமெரிக்கா தனது கடல்வளத்தைக் கண்டுகொள்வதில்லை எனக் குற்றஞ்சாட்டப்படுகிறது. தனது வளத்தைப் பாதுகாப்பதில் அமெரிக்கா அண்மைக்காலத்தில் கவனம் செலுத்தவில்லை. இது மனிதனுக்கு மட்டுமல்ல, கடலை நம்பிவாழும் பிராணிகளுக்கும் இறுதியில் ஆபத்து விளைவிக்கும் என, பல சூழல் பாதுகாப்பு ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

# லண்டன் அருங்காட்சியகம்

**ல**ண்டனிலுள்ள பிரிட்டிஷ் அருங்காட்சியகம், தனது 250 ஆவது ஆண்டு நிறைவைக் கடந்த சனிமுதல் கொண்டாடுகிறது. வைபவங்கள் அடுத்தாண்டுவரை நீடிக்கும். ஆண்டு வைபவத்தின் ஒரு நிகழ்வாக அண்மையில் சீரழிந்துபோன, ஈராக்கின் தொன்மைமிகு அருங்காட்



## வயது 250

சியகத்தைப் புனரமைக்கும் பணியில் ஈடுபட, பிரிட்டிஷ் அருங்காட்சியக நிபுணர்கள் ஈராக் செல்கின்றனர்.

1753 ஆம் ஆண்டு ஜுன் 7 ஆம் திகதி பிரிட்டிஷ் அருங்காட்சியகம் இயங்க ஆரம்பித்தது.

# உலகப் புகழ் பெற்ற இயக்குநர்கள்

## ஸ்டீபன் ஸ்பீல்பெர்க்

இவரது இந்த அணுகுமுறைக்கு இவர் மனிதர்களின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்கும் திறன் பெருமளவு கைகொடுக்




ஸ்பீல்பெர்க்கின் 'சேவிங் பிறைவேற் ரயன்' படத்தின் விளம்பர சுவரொட்டி இது.

கிறது எனலாம். படம் யதார்த்த வேகத்தில் வளர்ந்து, காரணகாரிய அடிப்படையில் விரிந்து, சட்டென்று சாகசத்துக்குள் நுழைந்துவிடுகிறது. நவீன உலகின் நிதர்சனப்போக்குகளில் சிக்கிக்கொள்ளாமல், அவற்றை விமர்சித்து ஆராயாமல், நேராகக் கனவுலகத்துக்குள் அமிழ்ந்து விடுகிறது. இதுபோன்ற சந்தர்ப்பங்களில் பார்வையாளர்களிடையே மிகப்பெரிய எதிர்பார்ப்பை உருவாக்கி, ஏமாற்றாமல் அதை உச்சநிலைக்குக் கொண்டுசெல்லவும் செய்கிறார். இறுதியில் அது வெகுகவனமாக உடைக்கப்பட்டு, பார்வையாளர்களின் பரவசத்தை, ஒரு நீண்டபெருமூச்சைப் பதிலாகப் பெறுகிறது.

திரைப்படம் பார்க்கும் ரசிகர்களின் உணர்வுகளைக் கூராக்கி, ஒரே திசையில் குவியச் செய்து, அடுத்து என்ன நேருமோ? எவ்வாறு முடியுமோ என்கிற பதைபதைப்பைத் தவறாமல் ஏற்படுத்தவே செய்கிறார். இதுவரையிலான, ஸ்பீல்பெர்க்கின் படத்தை ஊன்றிக் கவனித்துவந்த எந்தவொரு ரசிகராலும், இவரது படத்தின் அடுத்த காட்சி இதுதான் என்றோ, இப்படித்தான் அமையும் என்றோ அனுமானிக்க முடியாதபடி ஸ்பீல்பெர்க் திரைக்கதையால் அசத்திவிடுகிறார். 1971 ஆம் ஆண்டு வருடம் வெளியான டூயல் (**DUEL**), பின்னர் வெளிவந்த ஜாஸ் ஆகிய இரு படங்களிலும் ஸ்பீல்பெர்க்கின் இந்த அணுகுமுறை வெகு துல்லியமாக வெளிப்பட்டுள்ளது.



ஸ்டீவன் ஸ்பீல்பெர்க்

உயிரற்ற இரண்டு பொருட்கள், முந்தைய படத்தில் ஒரு ட்ரக் வண்டியும், பிந்தைய படத்தில் ஒரு சுறாமீனும், படம் முழுக்க இத்தகைய உணர்வை ஏற்படுத்தத் தவறவில்லை எனலாம். நமது உண்மை வாழ்வில் அத்தகைய சந்தர்ப்பங்களை நாம் சந்திக்க நேரிட்டால்கூட, நமக்கு ஏற்படாத ஓர் உணர்வை, இந்தப் படங்கள் பெருமளவில் நம்மிடம் ஏற்படுத்தத் தவறவில்லை. இது ஸ்பீல்பெர்க் என்கிற கலைஞனின் தனித்துவம் எனலாம். ஒரு திரைப்பட உருவாக்கத்தில் நவீனகாலத்திய இயக்குநரின் பங்கு எவ்வளவு என்பதை ஸ்பீல்பெர்க் வெகுசாதாரணமாக வெளிப்படுத்துகிறார்.

இந்த விடயத்தையே ஒரு குறை என்றுகூட, மேல்நாட்டு விமர்சகர்கள் குறிப்பிடுவது உண்டு. 1974 ஆம் ஆண்டு வெளியான சுகர்லாண்ட் எக்ஸ்பிரஸ் (**SUGARLAND EXPRESS**) இந்தக் கூற்றைப் பொய்ப்பிப்பதற் காகவே எடுக்கப்பட்ட படம் எனலாம்.

1975 இல் வெளியான ஜாஸ், தியட்டர் பக்கமே வராதவர்களைக்கூட வலியவந்து பார்க்கவைத்த படம். படம் வெளியான ஒன்றரை மாதத்துக்குள் அமெரிக்கா நாட்டில் வசிக்கும் எட்டில் ஒரு பகுதி மக்கள் இதைப் பார்தது ரசித்தனர்.

பீட்டர் பெஞ்ச்லே என்பவர் - எழுதிய நாவலின் அடிப்படையில் 'ஜாஸ்' படத்தின் திரைக்கதை அமைக்கப்பட்டது. ஒரு கோடியே இருபது இலட்சம் டொலர் செலவில் தயாரிக்கப்பட்ட இந்தப் படம், பதின்மூன்று கோடி டொலரை வசூல் செய்தது. 124 நிமிடம் ஓடக்கூடிய இந்தப் படத்தில் பணிபுரிந்த - இசையமைப்பாளர் ஜோன் வில்லியம்ஸ், ஒளிப்பதிவாளர், எடிட்டர் ஆகிய மூவரும் இந்தப் படத்துக்காக ஒஸ்கார் விருதுபெற்றனர்.

கடல்வாழ் உயிரினங்களை ஆராய்ச்சி செய்யும் ஆராய்ச்சியாளர் ஒருவரும், அமிட்டி நகரப் பொலிஸ் அதிகாரி ஒருவரும், சுறா வேட்டைக்காரர் ஒருவரும் இணைந்து சுறாமீன் ஒன்றை வேட்டையாடுவது தான் கதை.

அமிட்டி நகருக்குவரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்து - அதனால், அது தொடர்பான வியாபாரங்கள் பாதிக்கப்படும் என்று கருதும் நகரமேயர், இராட்சத சுறாமீனின் நடமாட்டம் பற்றிய செய்தியை வெளியுலகுக்குத் தெரியாமல் மறைக்கப் பார்க்கிறார். சுற்றுலாவுக்காக வரும் பய




பகுதி 02

ணிகளில் ஓரிருவர் சுறாவுக்குப் பலியானதுடன் படம் விறுவிறுப்படைகிறது. காற்று நிரம்பிய பிளாஸ்ரிக் பலூன் ஒன்றிலிருந்து நழுவிவிழும் இளம் பெண் ஒருத்தியைச் சுறா விழுங்கிவிடுகிறது. திடுமென அந்தப் பிராந்தியமே பரபரப்படைகிறது.

கடலில் குளிக்க வருபவர்களைப் பிரம்மாண்டமான சுறா விழுங்குகிறது என்ற செய்தி காட்டுத் தீயாகப் பரவுகிறது. இதனால், சுற்றுலாப் பயணிகளின் வருகையும், அதனால் அந்த நகருக்குவரும் வருமானமும் குறைகிறது. எனவே, நிலைமையைப் பழையபடி சரிப்படுத்த என்ன செய்வது?

(தொடரும்...)

# அமெரிக்க - ரஷ்ய ஹொட் லைனுக்கு

அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே அந்நாட்டுத் தலைவர்கள் எந்தவேளையிலும் தொடர்புகொள்ளக் கூடியதாக அமைக்கப் பட்டிருந்த, 'ஹொட் லைன்' (Hot line) என்னும் தொலைபேசிச் சேவை ஆரம்பிக்கப்பட்டு, இந்த



புட்டின்

மாதத்துடன் 40 வருடங்களாகின்றன.

இருநாடுகளுக்கும் இடையிலான பனிப்போர் ஆரம்பித்ததன் பின்னர், இந்தத் தொலை பேசியூடாகத் தொடர்புகொண்டே பல சமயங் களிலும் பதற்றங்கள் தணிக்கப்பட்டிருக்கின்றன.

1963 ஆம் ஆண்டு - கியூபாவின் ஏவுகணை விவகாரம் பெரிதாகி - அணு ஆயுதப்போர் மூண்டுவிடுமோ என உலகமே அஞ்சிய வேளை யில், 'ரெட் ரெலிபோன்' எனப்படும் தொலைபேசி - ரஷ்யாவின் ஜனாதிபதி மாளிகையான கிரெம் ளினில் பொருத்தப்பட்டது.

ஆனால், 1967 ஆம் ஆண்டில்தான் இது முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்டது. இஸ் ரேலுக்கும், அரபு நாடுகளுக்குமான போரின் போது - பதற்றத்தைத் தணிக்க ரஷ்யாவின் பிரதமராக இருந்த அலெஸ்கி கொசிஜின், ரஷ்ய உளவுத்துறைத் தலைவரான யூரி ஆந்திரபோவ்

## இன்று வயது நாற்பது

(இவர் பின்னாளில் ரஷ்ய ஜனாதிபதியாகவும் இருந்தார்), வெளிவிவகார அமைச்சர் அன்டிரி குரோமிக்கோவ் ஆகியோர் கிரெம்ளின் மாளிகையின் கீழ்த்தளத்தில் பொருத்தப் பட்டிருந்த தொலைபேசி அறைக்குச் சென்று- 'ஹொட் லைன்' ஊடாக அப்போதைய அமெ ரிக்க ஜனாதிபதி லிண்டன் பி.ஜோன்சனுடன் பேசினர்.

இப்போது உண்மையில் அங்கு தொலை பேசி இருக்கவில்லை. தொலைத்தொடர்பு வசதி கொண்ட தட்டெழுத்துச் சாதனமே அங்கிருந் தது சுவாரசியமான விடயம்.

இதனூடாகவே பேச்சுக்கள் இருதரப்



பாலும் நடத்தப்பட்டன. ரஷ்யத் தலைவர் களுக்கு ஆங்கிலம் தெரியாததால் - அவர் கள் கூறுவதை மொழிபெயர்ப்பாளர் ஒருவர் மொழிபெயர்த்த பின்பே, அவை தட்டெழுத் தில் பொறிக்கப்பட்டு அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டன.

ஆனால், பின்னர் 1970 ஆம் ஆண்டில்



பிரஷ்னேவ்

பிரஷ்னேவ் ஜனாதிபதியாக இருந்தபோது, உண்மையான தொலைபேசி பொருத் தப்பட்டது.

அப்போது - பிரஷ்னேவும், அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டரும் - ஆப்கானில் ரஷ்யப் படைகள் நுழைந்தது பற்றித் தொலைபேசியில் பேசிக்கொண்டார்கள்.

இந்தத் தொலைபேசிச் சேவை அப்போது ஆடிக்கொரு முறையும், அமாவாசைக்கு ஒரு முறையும் பயன்படுத்தப்பட்டாலும், இன்று விளாடிமிர் புட்டினும், ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷும் அடிக்கடி பேசிக்கொள்வதாகக் கிரெம்ளின் அதிகாரிகள் கூறுகின்றனர்.

# அவுஸ்திரேலியாவின் பாரியமரம் தீக்கு இரையானது!

அவுஸ்ரேலியாவின் மிக உயரமான மரம் - அண்மையில் ஏற்பட்ட காட்டுத்தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.



260 அடி உயரம் கொண்ட 'El Grande' என அழைக்கப்பட்ட இந்த மரம் 'ரஸ்மேனியா' தீவில் இருந்தது.

நான்கு நூற்றாண்டுகள் வயதைக் கொண்ட இந்த மரம் அவுஸ்தி ரேலியா வின் தேசியத் சொத்தாகவும் கருதப் பட்டது.

காட்டுத் தீயினால் அழிந்த இந்த மரத்தை, மீண்டும் துளிர்க்க வைக்க முடியுமா என்றும் முயற்சிகள் தொடர் கின்றன.

அதேவேளை - இந்த மதிப்புக்குரிய மரத்தையே பாதுகாக்க முடியாத அர சாங்கம் ; இனி என்ன செய்து, இயற்கை வளங்களைப் பாதுகாக்கப் போகிறது என ஆத்திரப்படும் அவுஸ்ரேலிய மக்களும் இருக்கவே செய்கின் றனர்.

# டயானாவின் இரண்டாவது மகன் ஹாரியின் பாடசாலை வாழ்வு!

டயானாவை உங்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கும். அவரது இரண்டாவது மகன் இளவரசன் ஹாரி பற்றித் தெரியாதல்லவா.



இளவரசர் ஹாரிக்குத் தற் போது வயது 18. தமையன் இளவரசர் வில்லியம்ஸ் போலவே, துடியாட்டம் இல்லாவிட்டாலும், (Pop பாடகி பிரிட்னி ஸ்பியர்ஸ் துரத்தித்துரத்தி காதலித்தவர் வில்லியம்ஸ். இன்றும் பல பெண்களின் கனவு நாயகன்) அமைதியால் அனைவரையும் கவர்கின்றார்.

தான் படிக்கும் பாடசாலை யின் தங்கும் விடுதியில் - டயானாவின் படத்தை வைத்து, அவரைப் போற்றுவதாக ஹாரி கூறுகின்றார்.

பெர்க்ஷயர் பாடசாலையில் (Berk shire School) ஐந்து வருடக் கல்வியை முடித்திருக்கும் ஹாரி - இதுவரை வெளியுலகிற்குத் தெரியவராமல், தன்னை மறைத்துக் கொண்டதாகவே இருந்தார். ஆனால், இப்போது இவரது பாடசாலை வாழ்க்கை பற்றிய புகைப்படங்கள் வெளித்தெரியவர ஆரம்பித்துவிட்டன.

இளவரசி டயானா, பாரிஸில் கார் விபத்தில் பலியாகும்போது, ஹாரிக்கு வயது பன்னிரெண்டுதான். அந்தத் தூரம் ஹாரியைவிட்டு நீங்கவில்லை என்றே, அவருக்கு நெருங்கிய நண்பர்கள் கூறுகின்ற னர்.



ஹாரி படிப்பில் மட்டுமல்ல - இராணுவ கடேற் பிரிவிலும், ரக்பி உதைபந்தாட் டத்திலும் விருப்போடு பங்கேற்று வந்தார் என்றும் - பாடசாலையின் இராணுவ கடேற் அணிக்குத் தலைமை தாங்கியிருக்கிறார் என்றும், இவரது ஆசிரியர்கள் கூறுகின்றார் கள்.

கடந்த வியாழக்கிழமை லண்டன் உயர் தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய ஹாரி, பல்கலைக்கழகக் கல்விக்காகக் காத்திருக் கிறார்.

# இரத்தம் ஏற்றிய உற்சாகம்

தமது சகாக்களின் இரத்தத்தை ஏற்றிக் கொள்வதன்மூலம், போட்டிகளில் வெற்றிவாகை சூடும் புதிய தந்திரம் ஒன்று விளையாட்டுத்துறை யில் புகுந்துந்துள்ளது. இத்தகைய சட்டவிரோத இரத்தமாற்று ஒரு போதையூட்டு நடவடிக்கை யாகவே (Doping) மேற்கொள்ளப்படுகிறது.

விளையாட்டுப்போட்டிகளில், அதிலும் குளிர் கால (Winter Sports) போட்டிகளில் பங்குபற்றும் விளையாட்டு வீரர்கள், இவ்வாறு தமது சகாக்க ளுக்கு இரத்த மாற்றீட்டின்மூலம் போதையூட்டி அவர்களின் தாங்குதிறனைக்கூட்டி, அவர்கள் - பதக்கம் வெல்லும் வாய்ப்பை அதிகரிக்கச் செய் கின்றனராம். இந்தச் சட்டவிரோத செயற்பாடு அதிகரித்துக் கொண்டுவருகிறதாம்.

விளையாட்டுப் போட்டிகளுடன் தொடர்பான சர்வதேச மருத்துவசங்கம் ஒன்றின் தலைவர் ஜிம் கராப்ரி என்பவர் தகவல் தருகையில், கடந்த ஆண்டு சோல்ற்லேக் நகரில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற அநேகமான வீரர்களின் உடலில் ஊசி குத்திய காயங்கள் காணப்பட்டதாகவும், இது தமக்குச் சந்தேகத்தைத் தந்ததாகவும் கூறுகிறார்.



# எதிரில் நிற்பவரின் மூளைக்குள் ஊடுருவுகிறது உங்கள் கோபம்!

நீங்கள் கோபத்துடன் அல்லது கொடூரமாக உங்கள் முகத்தை வைத்துக்கொண்டு உங்கள் எதிரில் நிற்பவரின் கண்களை நேருக்கு நேராக பார்த்தீர்களேயானால், அவரின் மூளையின் (எதிர்நிற்பவரின்) செயற்பாட்டில் மாற்றங்கள் ஏற்படும் என ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.



மனிதன் தனது கோபத்தைக் காட்டும் முகத் தோற்றத்துடன் கூடிய புகைப்படங்கள் சிலதை, நேருக்கு நேராகக் காட்டி, அவ்வேளையில் - அதைப் பார்ப்பவரின் மூளையில் எப்பகுதிகளில் மாற்றங்கள் ஏற்படுகிறது என ஸ்கானர் உதவியுடன் அமெரிக் காவின் டார்ட் மவுத் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டனர். இத்தகைய மனித மனோநிலையை மூளையின் AMYGDALA என்ற பகுதியே கிரகிப்பதாக ஆய்வாளர்கள் கருது கின்றனர். ஏனெனில், இப்படியான சந்தர்ப்பங்களில் இப்பிரதேசத்தின் தொழிற்பாடு அதிகரிப்பது ஸ்கானர் மூலம் தெளிவாகத் தெரிவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

# இனிப்பு வைத்து மயக்கி மலேரியாக் கிருமி அழிப்பு

மலேரியா நோயை உருவாக்கும் ஒட்டுண்ணிக் கிருமியை இனிப்புக் கொடுத்துக் கொல்லும் புதிய முறை ஒன்றை விஞ்ஞானிகள் கண்டறிந் துள்ளனர். வருடாந்தம் ஆயிரக்கணக் கானவரின் உயிருக்கு உலைவைக் கும் மலேரியா, வரவர எதிர்ப்பு



மருந்துகளுக்கு இசைவாக்கம் பெற் றுப் பலம்பெறுவதால், பழைய முறை யிலான சிகிச்சைமுறை பெரிய பலனைக் கொடுப்பதில்லை. இத னால், புதுமுறை ஒன்று அறிமுக மாகிறது.

லண்டனிலுள்ள சென்.ஜோர்ஜ் மருத்துவக் கல்லூரியின் குழுவினர் இதன் முறையை வெளியிட்டுள்ளனர். அதாவது, மலேரியா ஒட்டுண்ணிக் கிருமி, தான் வாழும் மனித இரத்தத்தின் செங்குருதிச் சிறு துணிக்கையினுள் தன்னைப் பல்கிப் பெருக வைப்பதற்காக, குளுக்கோஸ் வடிவாக மாறி யிருக்கும் சீனியையே அதிகம் உள்ளெடுக் கிறது. புதிய திட்டத்தின்படி ஒரு புதுவகை, புரதவகை ஒன்றை உடலினுள் செலுத்தி, அது தன்னைச் சுற்றியிருக்கும் கலங்களிலி ருந்து குளுக்கோஸை உள்ளிழுத்துக் கொள்ளவைப்பது முதற்படி. அதிக குளுக் கோஸ் இருக்கும் இந்த புரதவகையினுள் மலேரியா ஒட்டுண்ணிகளை ஈர்க்க வைப் பது இரண்டாம்படி. இறுதியில் அந்த புரத வகைக்கான விநியோகத்தைத் திடீரெனத் துண்டித்து, மலேரியா ஒட்டுண்ணியின் உணவு விநியோகத்தை நிறுத்தி அதனுள் ளேயே கூண்டோடு ஒழிப்பது மூன்றாவது படி.

இந்தத் திட்டம் வெற்றியளித்துள்ள தால், மலேரியாவுக்குப் புதிய மருந்தை கண்டறிவது சுலபமாகிறது என்கிறார் ஆராய்ச்சியாளர் பேராசிரியர் சஞ்சீவ் கிருஷ்ணா.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P.- 021-2225108 www.eezhanadu.com

### சிந்தனைக்கு

வான்உயர் தோற்றம் பொன்செய்யும் தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின்

-திருக்குறள்

# நமது நோக்கு

## யாப்பும், யாப்பிற்குரியவரும் !

இராணுவத்தினாரால் மக்கள் குடிமனைகளை வளைத்து உருவாக்கப்பட்டிருக்கும் உயர்பாதுகாப்பு வலயங்கள் - இடம்பெயர்ந்து வாழும் மக்கள் மீள்குடியமர்வதைத் தடுக்கும், அடிப்படை மனித உரிமை மீறல்களுக்குரியவை என்பதோடு -

இலங்கை அரசியல் யாப்பின்படியான, மக்களுக்கான சுதந்திரத்தைப் பறிப்பதாகவும் அமைந்துள்ளன.

அதேவேளை, உயர் பாதுகாப்பு வலயங்கள் விடயத்தில், இராணுவத்தரப்பு தன்னை நியாயப்படுத்துவதன்படியான பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம், அவசரகால விதிகள் அற்றுபோயிருப்பதால் - அதுவும் உபயோகிக்கப்பட முடியாத நிலைக்கே ஆளாகியிருகிறது.

அரசியல் யாப்பின் மூன்றாவது சரத்தின் 14 ஆவது பிரிவில் - பொதுமக்களின் வசிப்பிட சுதந்திரமும், தங்குதடையற்ற நடமாட்டத்திற்கான சுதந்திரமும் வலுயுறுத்தப்பட்டுள்ளன, உறுதிசெய்யப்பட்டிருக்கின்றன எனக் கூறப்படுமிடத்து -

உயர்பாதுகாப்பு வலயங்கள், இந்தச் சுதந்திரங்களை அப்பட்டமாகவே கட்டுப்படுத்துகின்றன.

அதேவேளை - அரசியல் யாப்பின் பதினைந்தாவது சரத்தின்படி, பாதுகாப்புக்கருதி மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் படையினருக்கு வழங்கப்பட்டுள்ள விசேட அதிகாரங்களும், இராணுவத்தின் நிலைப்பாட்டிற்குத் துணைபோனாலும் -

அவசரகாலச் சட்டம் தற்போது நடைமுறையில் இல்லாததால், உயர்பாதுகாப்பு வலயம் தொடர்ந்து தக்கவைக்கப்படுவது, அரசியல் யாப்புக்கே முரணானதாக அமைந்து விடுகின்றது.

இதுஇவ்வாறிருக்க - உயர்பாதுகாப்பு வலயத்தை வைத்திருப்பதற்கு, பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் தமக்கு வழி செய்வதாக, யாழ்.பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா கூறுகின்றார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு, தனக்குக் கிடைத்த 400 இற்கும் அதிகமான உயர்பாதுகாப்பு வலயம் பற்றிய புகார்கள் தொடர்பாக - மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு அனுப்பிய கடிதத்திற்கான பதிலிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், உண்மையில் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் பொலிஸாருக்கே அதிகாரங்கள் வழங்குவதும் - ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு அமையவே இராணுவத்தினருக்குத் தற்போது விசேடமாக அதிகாரமளிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இலங்கையின் அரசியல் யாப்பின் முக்கியதத்துவம் தொடர்பாகவும் - சட்ட வரையறை பற்றியும் வாய் பிளக்கப் பேசும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் -அரசியல் யாப்புக்கு முரணாக அமைந்துள்ள உயர்பாதுகாப்பு வலயங்கள் பற்றி மூச்சும்காட்டாமலிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் அரசியலமைப்புக்கு வெளியிலான, இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை முன்வைத்தபோது- அரசியல் அமைப்புக்குள்ளேயே அவ்வாறான அமைப்பை அமைக்கலாம் எனவும், சட்ட வரையறைகளை அரசாங்கம் மீற முடியாதெனவும் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முதல் அமைச்சர்கள் பீரிஸ், மிலிந்த மொறகொட என அனைவருமே மறுத்திருந்தனர். மாற்று யோசனைகளை முன்வைத்தனர்.

ஆனால், இவர்கள் இவ்விதம் போற்றும் அரசியல் யாப்பை மீறுவதாக - இடம்பெயர்ந்து வாழும் இலட்சக்கணக்கான மக்களின் மீள்குடியமர்வையும், சுமுகவாழ்வையும் தடுத்துநிற்கும் உயர்பாதுகாப்பு வலயங்களை நீக்குவதற்கு, இவர்கள் தயாராக இல்லை என்பது கவனிக்கத்தக்கது.

கொழும்பு ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையில், தமிழர்களுக்கு உரிமைகளை வழங்குவதைத் தடுப்பதற்கு அல்லது பின்னடிப்பதற்கும் அரசியல் அமைப்பைத் துணை தேடிக்கொள்ளும் நிலைதான் இருக்கின்றதேயொழிய - தமிழ் மக்களைப் பாதிக்கும் விடயங்கள், அரசியல் யாப்பு வழியே சுட்டிக்காட்டப்பட்டாலும், அவற்றை நீக்குவதற்கு அவர்களிடம் சிந்தனை எதுவும் இருக்கவில்லை என்பது, இதனால் வெட்ட வெளிச்சமாகிறது.

அரசியல் யாப்பின் உச்சாணிக் கொப்பில் அமர்ந்து கொண்டு, நிறைவேற்று அதிகாரம் என்னும் கிரீடத்தையும் சுமந்து, இலங்கையின் - ஒருமைப்பாடு, சுயாதிக்கம் எனப் பேசிவரும் ஜனாதிபதி முதலாக -

பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்குள் மூழ்கித் திளைத்து ஊறிப்போயிருக்கும் ஜே.வி.பி. வரையுள்ள அனைத்துத் தரப்பினரிடமும் - இதேபோன்ற போக்கும், மனநிலையுமே ஆழவேரூன்றி இருக்கிறது.

இவர்கள் அனைவரையும் பொறுத்தவரையில், இலங்கையின் அரசியலமைப்பு சிங்களவர்களின் நலன்களுக்கு மட்டுமானதே என்பது வலிமையான கருத்தியலாக அவர்களிடம் பதிந்திருக்கிறது.

இந்நிலையில் -

தமிழர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துநிற்கும், இலங்கையின் அரசியலமைப்பிற்குள் இடைக்கால நிர்வாகம் மட்டுமல்ல, தமிழருக்கான எந்தத் தீர்வுமே சாத்தியமாகாது என்ற விடுதலைப் புலிகளின் தீவிரமான, தெளிவான நிலைப்பாடு நூற்றுக்குநூறு வீதம் நியாயமானது என்பதும், இந்த உறுதி தமிழர்களின் அரசியல் எதிர்காலத்திற்கு மிக அவசியமானதும், அடிப்படையானதும் என்பதும் - கிஞ்சித்தும் சந்தேகத்திற்கிடமற்றதாகின்றது.

# ‘கிறோன் பிறீ’ தொடக்க விழாவில் அரைகுறை ஆடையில் மாணவிகள்!

### நடனமாடியதற்குப் பரவலான கண்டனம்

(கொழும்பு)

கொழும்பில் இடம்பெற்ற ஆசிய மெய்வல்லுநர் ‘கிறோன் பிறீ’ போட்டிகளின் தொடக்க விழாவில் - கொழும்பிலுள்ள பிரபல பாடசாலை மாணவிகள் அரைகுறை ஆடைகளுடன் ஹிந்திப் பாடல் ஒன்றுக்கு நடனமாடியது தொடர்பாகப் பலத்த கண்டனங்கள் எழுந்துள்ளன.

‘கிறோன் பிறீ’ தொடக்கவிழாவில் ‘குச்குச் கோத்தா ஹே’ (ஏதோ ஒன்று நடக்கிறது) என்ற பாடலுக்கு கொழும்பு விசாகா வித்தியாலய, சிறிமாவோ பண்டாரநாயக்கா பாலிகா வித்தியாலயம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவிகள் அரைகுறை ஆடைகளுடன் நடனமாடினர்.

இவ்வாறு அரைகுறை ஆடைகளுடன் பாடசாலை மாணவிகள் - விளையாட்டுப் போட்டியொன்றின் தொடக்கவிழா நிகழ்வில் நடனமாட அனுமதிக்கப்பட்டமை குறித்து, விளையாட்டுத் துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோ மற்றும் கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு ஆகியோரிடம் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

விளையாட்டுவிழாவின் தொடக்க நிகழ்வில் நடனமாடுவதற்கு இலங்கையில் இசை இல்லையா என்றும், எதற்காக இப்படிப்பட்டதொரு பாடல் தெரிவு செய்யப்பட்டதென்றும் பரவலான கண்டனங்கள் எழுந்துள்ளன.

இத்தகையதொரு பாடலுக்கு அரைகுறை ஆடைகளுடன் மாணவிகளை நடனமாட அனுமதித்த - கல்வி அதிகாரிகளின் மீதும் குற்றச்சாட்டுக்கள் கிளம்பியுள்ளன.

இதேவேளை, இந்த விழாவில் நடனமாடுவதற்கு மாணவர்கள் கல்வி அமைச்சினூடாகவே அனுப்பி வைக்கப்பட்டனர் என்றும், ஆனால் பாடலுக்கோ, நடனத்திற்கோ தாம் பொறுப்பாளிகள் அல்ல என்றும் மேற்படி பாடசாலைகளின் அதிபர்கள் அறிவித்துள்ளனர்.

ஆனால், கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் இது குறித்து தெரிவித்தபோது, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரே மாணவிகளை இந்த விழாவில் நடனமாட அனுபபுமாறு கல்வி அமைச்சின் செயலாளரிடம் அனுமதி கேட்டார். அதற்கு அனுமதி மட்டுமே கல்வி அமைச்சால் வழங்கப்பட்டது. ஆனால், நடனத்துக்கோ, பாடலுக்கோ கல்வி அமைச்சு பொறுப்பாக இருக்கவில்லை எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்த விவகாரம் குறித்து விளையாட்டுத் துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோ கருத்து தெரிவித்தபோது -

‘குச்குச் கோத்தா ஹே’ படம் இலங்கையில் பரவலாகத் திரையிடப்பட்டது. அப்போது இப்படத்துக்கு எந்தவிதமான எதிர்ப்பும் கிளம்பவில்லை என்ற காரணத்தாலேயே, மாணவிகளை இந்தப் பாடலுக்கு நடனமாட ஏற்பாடு செய்யப்பட்டது என்று தெரிவித்தார்.

மாணவிகளுக்கான உடையைத் தெரிவுசெய்த அதிகாரிகள் குறித்த விசாரணைகளை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன்,

இப்படிப்பட்ட நிகழ்வுகளில் மாணவிகளை ஈடுபடுத்தும் போது, மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் என்று கல்வி அமைச்சு அதிகாரிகளைக் கேட்டுள்ளது.

# அரசியல் பீதியை ஏற்படுத்தி சமாதானத்தை குழப்புவதாக சந்திரிகா மீது குற்றச்சாட்டு

### கூட்டணி எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம் சுமத்துகிறார்

பிரதமரும் - ஜனாதிபதியும் புரிந்துணர்வோடு செயற்பட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வரவேண்டுமென்று, தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

இந்தச் சமாதானச் செயற்பாடுகளை சந்திரிகா குழப்ப முற்பட்டால், மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படும் பட்சத்தில் இந்த நாடு பேரழிவினை எதிர்நோக்க வேண்டிவரும்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் 10 ஆண்டுகளுக்கு இடைக்கால நிர்வாகசபையைக் கொடுப்பதாக ஜனாதிபதி சந்திரிகா முன்னர் கூறியிருந்தார். புதிய அரசு அமைக்கப்பட்டு ஒன்றரை வருடங்களுக்குப் பின்னர், சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற இந்தச் சூழ்நிலையில், ஜனாதிபதி அபிவிருத்தி லொத்தர் சபையைப் பொறுப்பேற்றிருப்பது அவரது உண்மையான விஸ்வரூபத்தையே எடுத்துக்காட்டுகின்றது என்றும் கூறினார்.

ஒரு அரசியல் பீதியை ஏற்படுத்தி சமாதானத்தை குழப்புகின்ற நோக்கத்திற்காக, ஜனாதிபதி இந்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் என்பது தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது என்று, அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?

### கேள்வி எழுப்புகிறார் தினேஷ் குணவர்த்தன

வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக அரசாங்கம் தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். இடைக்கால நிர்வாகம் குறித்து எதிர்க்கட்சிகளின் கருத்தை அறிய விரும்பும் அரசு, முதலில் தமது கருத்தை வெளியிட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, எதிர்க்கட்சிகள் அனைத்தும் இணைந்து பொதுவான யோசனை ஒன்றை முன்வைக்கவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக அரசியலுக்குத் திரும்ப வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டிய அவர்,

இடைக்கால நிர்வாக சபை உருவாக்கப்பட்டால், அதில் அரசியற்கட்சிகளின் பிரதிநிதிகளும் அங்கம்வகிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

# வட-கிழக்கில் கண்ணிகளை அகற்ற இன்னும் ஆறு வருடங்கள் எடுக்கும்!

### ஸ்கொட்லாந்து கண்ணிவெடி அகற்றும் நிபுணர் கூறுகிறார்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு இன்னும் ஆறு வருடங்கள் செல்லும் என, ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த கண்ணிவெடி அகற்றும் நிபுணரான டெய்ம் தெரிவித்துள்ளார்.

பத்து இலட்சம் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டாலும், உண்மையில் இந்த எண்ணிக்கையைவிட அதிகமான கண்ணிவெடிகளே புதைக்கப்பட்டிருக்கின்றன என்று கூறிய டெய்ம்,

இராணுவத்தினர் - தாம் கண்ணிவெடிகளைப் புதைத்ததாகக் கூறித் தந்த வரைபடங்கள் - கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட பகுதிகளை மேம்போக்காகக் காட்டுகின்றனவேயன்றி, குறிப்பிட்டுச் சொல்லவில்லையெனவும் தெரிவித்தார்.

இந்த வரைபடங்கள்மூலம் கண்ணிவெடிகளை அகற்றுவதென்பது மிகக்கடுமையான பணியாகவே இருக்குமெனவும் டெய்ம் கூறினார்.

# அனுரா கூறியது ‘சீரியஸ்’ அல்ல: மறுப்பு விடுக்கிறார் கதிர்காமர்!

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் முக்கிய ஆலோசகர்களான - முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கும், ஜனாதிபதியின் சகோதரரான அனுரா பண்டாரநாயக்காவுக்குமிடையே மோதல் வலுத்துள்ளது.

அண்மையில் அனுராதபுரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றிய, அனுரா பண்டாரநாயக்க - உள்துறை அமைச்சையும், தகவல் தொடர்பு அமைச்சையும் விரைவில் ஜனாதிபதி தன்வசம் எடுத்துக்கொள்வார் எனக் கூறியிருந்தார்.

இந்தக் கூட்டம் நடந்து சில மணிநேரங்களில் கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் பேசிய லக்ஷ்மன் கதிர்காமர் - செய்தியாளர்கள் அனுராவின் பேச்சுப் பற்றிக் கேட்டபோது,

அதனை ‘சீரியஸாக’ எடுத்துக்கொள்ள வேண்டாம், அரசாங்கம் இதுபற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று கூறியதுடன்,

இந்த அரசியல் பேச்சில் பெறுமதி எதுவும் இல்லை. பண்டாரநாயக்க கூறுவது அமுல்படுத்தப்படமாட்டாது என்றும் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

இந்த அரசியல் போட்டி - தெற்கின் செய்தியாளர்களிடையே சுவாரசியத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறது.

# எயிட்ஸ் பாதித்த குழந்தையை பராமரித்த தாதிக்கும் எயிட்ஸ்?

(கொழும்பு)

எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தை ஒன்றைப் பராமரித்து வந்த தாதி ஒருவருக்கு எச்.ஐ.வி. கிருமிகள் தொற்றியிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

இருமல், தொடர்காய்ச்சலுடன் பாணந்துறை வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட குழந்தையொன்றுக்கு, நோய் நீண்டநாட்களாகக் குணமடையவில்லை. இந்த நிலையில் குழந்தை இரத்த வாந்தி எடுத்ததால் சந்தேகம் கொண்ட மருத்துவர்கள், இரத்த மாதிரியை எயிட்ஸ் நோய் பரிசோதனைக்காக எடுக்கத் தீர்மானித்தனர்.

இரத்த மாதிரியை தாதியொருவர் எடுத்துக்கொண்டிருந்த போது - தவறுதலாகத் தாதியின் கையில் இந்த ஊசி சிறு கீறலை ஏற்படுத்தியது.

பின்னர் - குழந்தையின் இரத்த மாதிரியைப் பரிசோதித்த போது, எயிட்ஸ் நோய் தொற்றியிருப்பது தெரிய வந்தது.

இதையடுத்து, இந்த மாதிரியை எடுத்த தாதிக்கும், எச்.ஐ.வி. கிருமிகள் தொற்றியிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டதையடுத்து, அவருக்கு எச்.ஐ.வி. பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

ஆனால், தாதிக்கு எயிட்ஸ் நோய்க் கிருமிகள் தொற்றியிருக்கவில்லை எனக் கண்டறியப்பட்டதாயினும் - மேற்படி தாதியைத் தொடர்ச்சியான மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# ஆட்சியைக் கலைக்கத் துடிக்கும் ஜனாதிபதியும் திடீர் பணக்காரர்களாக மாற விரும்பும் மக்களும்

இலங்கையில் வாழும் மக்களில் பெரும்பாலானோர் எப்படியாவது பணக்காரர்களாகி



விட வேண்டும் என நினைக்கின்றார்கள். அப்படி நினைப்பதில் தவறில்லையே என்று நீங்கள் கூறலாம். உண்மைதான். கடுமையாக உழைத்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என நினைப்பவர்களைப் பாராட்டலாம். அவர்களை ஊக்குவிக்கலாம். அபிவிருத்தி லொத்தர் சபையை நம்பி, பணக்காரர்களாக நினைப்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? இதற்கு உங்களால் பதில் கூற முடியாது. இலங்கையில் வாழும் மக்களில்



பலர் வறுமைக்கோட்டுக்குக்கீழ் வாழ்கின்றார்கள். அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்கள், அன்றாட வாழ்க்கையை மாதச்சம்பளத்தைக் கொண்டு ஓட்டமுடியாதவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் எல்லோருக்கும் ஒரு நப்பாசை. நாங்களும் பணக்காரர்களாகி விடமுடியாதா? இதற்கு என்ன வழி? இருக்கவே இருக்கிறது 'லொத்தர் சீட்டு' 10 ரூபாய் கொடுத்து தமது அதிர்ஷ்டத்தைச் சோதிக்கின்றார்கள்.

தென்னிலங்கையில் பெரும்பாலானவர்கள் லொத்தர் சீட்டுக்களை வாங்கத் தவறுவதேயில்லை. தினமும் காலையிலும், மாலையிலும் லொத்தர் சீட்டுக்களை விற்பவர்களைச் சுற்றிப் பலர் நிற்பதைக் காணமுடியும். ஒவ்வொரு நாள் காலையிலும் தாங்கள் வாங்கிய சீட்டுக்கு, பரிசு கிடைத்திருக்கிறதா என லொத்தர் சீட்டு விற்பனையாளர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வார்கள். காலையிலேயே அவர்களது முகம் வாடிவிடும். சில நேரங்களில் அவர்கள் சீட்டுக்குச் செலவு செய்த பணமான 10 ரூபாய் கிடைக்கும். அந்தப் பணத்துக்கு மீண்டும் ஒரு சீட்டைப் பெற்றுக்கொள்வார்கள். பெரும்பாலானவர்கள் மாலையில் வேலை முடிந்து வீடு செல்லும்போது, எதை வாங்க மறந்தாலும் லொத்தர் சீட்டை வாங்க மறப்பதேயில்லை. லொத்தர் சீட்டு விற்பனையை நம்பி நாட்டில் பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இலங்கையில் லொத்தர்சபை பல்வேறு விதமான லொத்தர் சீட்டுக்களை அறிமுகம் செய்கின்றது. மக்களின் பணத்தைச் சுரண்டுவதற்காக அறிமுகம் செய்யப்பட்ட லொத்தர் சீட்டுக்களின் பெயர்களைப் பார்ப்போம். கொவி செத்த, சனிக்கிழமை அதிர்ஷ்டம், ஆஸ்பத்திரி லொட்டோ, ஜயவிரு சம்பத, சுப்பிரி வாசனா, அபிவிருத்தி அதிர்ஷ்டம், வாசனா சம்பத, மஹா ஜன சம்பத என்பன முக்கியமான லொத்தர் சீட்டுக்களாகும். இதைவிடச் சுரண்டல் உடனடி அதிர்ஷ்டச் சீட்டுக்களும் உள்ளன. அவ்வப்போது புதிய புதிய பெயர்களில் சுரண்டல் சீட்டுக்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

இந்த அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்கள் விற்பனையால், அரசாங்கத்துக்குப் பெருமளவு வருமானம் கிடைக்கின்றது. இந்தப் பணத்தை அரசு பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துகின்றது. அதிர்ஷ்ட இலாபச்சீட்டு விளம்பரத்தால் - பத்திரிகைகளுக்கும், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்களுக்கும் நிறைய வருமானம் கிடைக்கின்றது.

கடுமையாக உழைத்தல் வாழ்க்கையின் உச்சிக்கே செல்லலாம் என்று பெரியோர் சொல்லுவார்கள். தன்னம்பிக்கை - வாழ்க்கையில் உயர முக்கியமானதாகும். ஆனால், வாழ்க்கையில் உயர விடாமுயற்சி தேவையில்லை. 10 ரூபாய் கொடுத்து அதிர்ஷ்ட இலாபச்சீட்டுக்களை வாங்குங்கள். அதிர்ஷ்டம் கிடைக்கும் என லொத்தர் விளம்பரங்கள் கூறுகின்றன. இந்த விளம்பரங்களைப் பார்க்கும் அல்லது கேட்கும் அல்லது வாசிக்கும் இளம் சமுதாயம் எப்படித் தன்னம்பிக்கையை வளர்த்து வாழ்க்கையில் முன்னேறும். இளம் சமுதாயத்தை நல்வழிப்படுத்த வேண்டியது அரசின் கடமையல்லவா. புத்திஜீவிகள் சிந்திப்பார்களா? ஊடகங்களால் மூளைக்குச் சலவை செய்யப்படும்போது, எப்படித் தியாகம் செய்யக்கூடிய சமுதாயம் உருவாகும். சமுதாயம் எப்படிப்போனால் எமக்கென்ன. எமக்கு ஆட்சி நடத்தப் பணம் கிடைத்தால்போதும், என ஆட்சியாளர்கள் நினைக்கிறார்கள். புதிய புதிய அதிர்ஷ்ட இலாபச் சீட்டுகளை அறிமுகம் செய்கிறார்கள். சூதாட்டத்திற்கு மக்களைத் தயார்ப்படுத்துகிறார்கள்.

இன்று இந்த அதிர்ஷ்ட இலாபச்சீட்டு இலங்கைப் பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் இடையே முறுகல் நிலையைத் தோற்றுவிக்கும் அளவுக்கு வளர்ந்துவிட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் மிகவும் பலம்மிக்க அமைச்சர் மிலிந்த மொறகொடவின் அமைச்சின்கீழ் இருந்த அபிவிருத்தி லொத்தர்சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றிருக்கின்றார். இந்த உத்தரவு கடந்த மாதம் 26 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது.

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் - இன்னமும் வெளியிடப்படவிலலை. ஆனால் - அரசு, வர்த்தமானி அறிவித்தலைப் பிரசுரிக்க அனுமதி வழங்கவில்லை. இதனால், ஜனாதிபதி மிகுந்த ஆத்திரத்துடன் உள்ளார்.

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் ஜனாதிபதியாவார். எந்த அமைச்சையும், எந்த நேரத்திலும் பொறுப்பேற்கும் அதிகாரம் அவரிடம் இருக்கின்றது.

இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, தனக்கேற்ற முறையில் சட்டத்தை வகுத்துக்கொண்டார். உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமையைப் பெற்ற ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமையையும் பறித்தார். அவர் தனக்கேற்ற முறையில் வகுத்த திட்டத்தால், இவரது கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி இன்று திண்டாடுகின்றது.

சர்வவல்லமை படைத்த ஜனாதிபதி ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும், பிரதமர் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேறொரு கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தால், அரசாங்கம் ஆட்டம் காணுவது தவிர்க்கமுடியாததே.

இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப் பொதுஜன ஐக்கிய முன்னணி முயன்றபோது, ஐக்கிய தேசியக்கட்சி அதனைத் தடுக்க முயற்சி செய்தது. இன்று ஐக்கிய தேசிய முன்னணி சமாதான முயற்சியில் ஈடுபடுகின்றது. பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் அதற்கு எதிராகச் செயற்படுவதல் கூட்டுச்சேர்ந்துள்ளன. இந்த இரண்டு கட்சிகளுக்கும் இடையே தேர்தல் கூட்டு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. ஜே.வி.பி.கட்சி, புலிகளுடன் பேச்சு நடத்தக் கூடாது என்கிறது. பொதுஜன ஐக்கிய முன்னணியே, அயல்நாடு என்ன சொல்கிறதோ அதன் படி செயற்படுகின்றது.

சமாதானத்தை விரும்புவதாகக் கூறும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை ஆட்டம் காணவைக்கப் பல்வேறு அரசியல் வியூகங்கள் வகுக்கப்படுகின்றன. அதன் முதற்கட்டமே, அபிவிருத்தி லொத்தர்சபையை ஜனாதிபதி பொறுப்பேற்ற அதிரடி நடவடிக்கையாகும். இதனால், அரசுக்கு கிடைக்கும் வருமானத்தைச் செலவு செய்யவிடாமல் தடுப்பது, அதேவேளை ஆட்சியைக் கலைக்கலாமா என நாடி பிடித்துப்பார்ப்பது அவரது நோக்கமாக இருக்கலாம் என்ற கருத்தும் அரசியல் களத்தில் நிலவுகின்றது.

அமெரிக்காவின் உற்ற நண்பனான மிலிந்த மொறகொட அமைச்சின்கீழ் இயங்கும் அபிவிருத்தி லொத்தர் சபையைப் பொறுப்பேற்பதால், அதன் பிரதிபலிப்பு எப்படியிருக்கும் என்பதைப் பரீட்சித்துப் பார்ப்பது, ஜனாதிபதியின் தந்திரோபாயமாக இருக்கலாம் என வேறு சில அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

அதேவேளை - அரசு ஆட்டம் காணும் நிலையிலிருந்தால், புலிகள் ரோக்கியோ மாநாட்டில் பங்குபற்ற முன்வரமாட்டார்கள்.

அவர்களது நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் தந்திரோபாயமாக அபிவிருத்தி லொத்தர்சபையைப் பொறுப்பேற்ற செயலைக் கருத இடமிருப்பதாகவும், மாற்றுக் கருத்துப் பத்திரிகையாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

தனது கட்சி ஆட்டம் காணும் நிலையில் இருக்கும்போது, புலிகள் கேட்கும் இடைக்கால நிர்வாகத்தை வழங்கப் பிரதமரால் முடியாது. அவர் அவ்வாறு செய்தால், அவரது அரசைக் கலைப்பேன் என ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ரோக்கியோவில் நடைபெறும் உதவிவழங்கும் நாடுகளுக்கான கூட்டத்தில் இந்தியா கலந்துகொள்ளுமா? என்ற சந்தேகம் நிலவி வந்தது. புலிகள் கலந்துகொள்ளமாட்டார்கள் என இந்தியாவுக்கு உறுதியான தகவல் கிடைத்தபின்பே, ரோக்கியோ மாநாட்டில் இந்தியா பங்குபற்றுகின்றது.

இந்தியாவை விமர்சித்து வந்த ஜே.வி.பி.- இந்தியாவின் நலன்கள் பாதிக்கப்படாத விதத்தில், இலங்கை நடந்துகொள்ள வேண்டும் என்று நீலிக்கண்ணீர் வடிக்கின்றது. சொந்த மக்களையே எவ்வித காரணமும் இன்றி கொன்று குவித்த ஜே.வி.பி. - இன்று மனித உரிமை பற்றிப் பேசுகின்றது. தமிழ் மக்களின் மனித உரிமை பற்றி அவர்களுக்கு எவ்வித அக்கறையுமில்லை.

தென்னிலங்கையில் மீண்டும் இனவாதம் மெல்ல மெல்லத் தலைதூக்கி வருகின்றது. அதேவேளை - கொலை, கொள்ளை மற்றும் கற்பழிப்புச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சிகளும் திரை மறைவில் நடை




பெற்று வருகின்றன. பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடக்கநிலைக்கு வந்துவிட்டது. தமிழ்மக்கள் பல்லாண்டுகாலமாகப் பேச்சுவார்த்தை என்று ஏமாற்றப்பட்டு வந்தார்கள். அதேபோன்ற ஏமாற்று வலை "ரோக்கியோ மாநாடு" என்ற போர்வையில் விரிக்கப்பட்டது. அந்த வலையில் புலிகள் சாதுரியமாகச் சிக்காமல் தப்பிக்கொண்டார்கள். கடந்தகாலப் பகுதிகளில் உதவிவழங்கும் நாடுகள் -



அபிவிருத்திப் பணிகளுக்குக் கொடுத்த கோடிக்கணக்கான பணம் யுத்தத்திற்குச் செலவிட்டமையை உலகநாடுகள் நன்கு அறிந்துள்ளன. ஆனால், நம் அரசியல் தலைவர்கள் அறிந்தும், அறியாதவர்களாக இருப்பது ஏன் என்று தெரியவில்லை என்கிறார் புகழ்பெற்ற சிங்கள அரசியல் விமர்சகர்.

அபிவிருத்தி லொத்தர் பிரச்சினை சமாதான முயற்சிகளுக்கும் குந்தகத்தை ஏற்படுத்தத்தான் போகின்றது.

பத்து வருடங்களுக்கு வடக்கு- கிழக்கு நிர்வாகத்தைப் புலிகளிடம் ஒப்படைக்கப் போகின்றேன் என்று ஒரு காலத்தில் கூறிய ஜனாதிபதி, அபிவிருத்தி லொத்தர்சபையை துரும்புச் சீட்டாகப் பயன்படுத்தப் போகின்றார்.

**உதரன்**

அதிர்ஷ்ட இலாபச்சீட்டு மக்களின் வாழ்வில் மட்டும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. அரசியல் களத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

லொத்தர் சீட்டு - சூதாட்டத்திற்கு வழி வகுக்கின்றது என்று சமூக ஆர்வலர்கள் கூறுகின்றார்கள். லொத்தர் சீட்டு விவகாரம், அரசியல் சூதாட்டத்திற்கும் வழிவகுத்துவிட்டது என்கிறார்கள் அரசியல் விமர்சகர்கள்.

ஆட்சிக் கலைப்பிற்கான பிரசார நடவடிக்கைகளில் ஜனாதிபதி மெல்ல மெல்ல ஈடுபட்டு வருகின்றார். புதிய கல்விச் சீர்திருத்தம் தோல்விகண்டு வருகிறது. என்னைப் பழிவாங்க புதிய கல்விச் சீர்திருத்தத்தைப் பயன்படுத்துகின்றார்கள் என்று, இப்போது ஜனாதிபதி புதிய குற்றச்சாட்டை அரசின் மீது சுமத்தியுள்ளார்.

திடீர்ப் பணக்காரர்களாக மக்களை மாற்றத் துணைபுரியும் லொத்தர் சீட்டு, ஆட்சி மாற்றத்துக்கு வழிவகுக்குமா?

ரோக்கியோ மாநாட்டின்பின் இலங்கை அரசியல் களநிலையைத் தீர்மானிக்கப் போவது இந்தியாவா? அமெரிக்காவா?

இலங்கை வெகுவிரையில் அமைதி இழந்த நாடாக மாறுவதற்கான முதல் சீட்டுத்தான் அதிர்ஷ்ட இலாபச் சீட்டாகுமா? ♦

# நெடுந்தீவுக் கடலில் மீண்டும் இந்திய மீன்பிடி இழுவைப்படகுகள்

கடந்தவாரம்- நூற்றுக்கும் மேற்பட்ட இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள், நெடுந்தீவுக்கும் நயினாதீவுக்கும் இடைப்பட்ட கடற்பகுதியில், அத்துமீறி நுழைந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டன.

இதனால், கடந்த ஒன்றரை மாதங்களாக நாளாந்தம் தொழிலில் ஈடுபட்ட நெடுந்தீவு மீனவர்கள், தற்போது - இந்திய இழுவைப் படகுகள் வரும் நாட்களான திங்கள், புதன் மற்றும் சனிக்கிழமைகள் தவிர்ந்த ஏனைய நாட்களிலேயே தொழிலில் ஈடுபடுகின்றனர்.

கடற்படையினரின் அச்சுறுத்தல் மத்தியிலும் தொழிலில் ஈடுபட்ட மீனவர்கள், தற்போது மீண்டும் இந்திய மீனவர்களின் அச்சுறுத்தலுக்குத் தாம் உள்ளாகி இருப்பதாகக் கவலை தெரிவித்தனர்.

(113)

# ஆரம்ப சுகாதார நிலையத்தை மீளத் திறக்குமாறு கோரிக்கை!

**மந்துவில் கிராம முன்னேற்றச்சங்கம் விடுத்தது**

(கொடிகாமம்)

மந்துவில் பகுதியில், முன்னர் இயங்கிவந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை, மீளவும் இயக்க நடவடிக்கை எடுக்குமாறு, மந்துவில் கிராம முன்னேற்றச் சங்கம் சாவகச்சேரி பிரதேச செயலரிடம் கோரிக்கைவிடுத்துள்ளது.

மேற்படி சுகாதார நிலையம் இயங்காமையினால், அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் வரணி மற்றும் சாவகச்சேரி மருத்துவமனைக்கே செல்லவேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க ஜனாதிபதி பதவி; போட்டியிடப் போவதில்லை!

## கிளின்ரனின் மனைவி ஹிலாரி அறிவிப்பு



அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தான் விரும்பவில்லை என, முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்ரனின் மனைவியான ஹிலாரி கிளின்ரன் அறிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டிலோ அல்லது 2008 ஆம் ஆண்டிலோ நடைபெறும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில், தான் போட்டியிடப்போவதாக வெளியான செய்திகளை அவர் மறுத்துள்ளார்.

தற்போது, நியூயோர்க் மாநகரின் செனட்டராகப் பதவி வகித்துவரும் ஹிலாரி கிளின்ரன் -

அமெரிக்க ஜனாதிபதியாக வருவதற்குத் தகுதியுள்ள ஏராளம் திறமையுள்ள, பெண்கள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - வெள்ளை மாளிகையில், அமெரிக்க ஜனாதிபதியின் மனைவியாகத் தான் வகித்த நாட்களைப் பற்றிய தனது அனுபவங்களை - நூலாக வெளியிடவுள்ள ஹிலாரி கிளின்ரன், இதற்காக - எட்டு மில்லியன் அமெரிக்க டொலர்களை நூலின் பதிப்பகத்தாரிடமிருந்து முற்பணமாகப் பெற்றுள்ளார்.

இந்நூலில், பெரும் சர்ச்சையைக் கிளப்பிய கிளின்ரன் - மொனிகா விவகாரம் தொடர்பாகவும், ஹிலாரி குறிப்பிடக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் - கிளின்ரன் தனக்குத் துரோகமிழைத்தாலும், மக்களை ஏமாற்றவில்லை என, ஹிலாரி இந்நூலில் எழுதியுள்ளதாக மற்றுமொரு தகவல் கூறுகின்றது.

# முஸ்லிம் பிரிவுகளிடையே மோதல்; பாகிஸ்தானில் 11 பொலிஸார் பலி!

## பலுசிஸ்தான் மாகாணத்தில் சம்பவம்

பாகிஸ்தானில், இஸ்லாமிய மதக்குழுக்களிடையே நடந்துவரும் மோதல்களின் தொடர்ச்சியாக - பலுசிஸ்தான் மாகாணத்தில் பதினொரு பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர், திடீரென நடத்திய தாக்குதலில் பலியானவர்கள் அனைவரும், ஷியா முஸ்லிம்கள் எனத் தெரியவருகிறது.

இத்தாக்குதலுக்கு - தடைசெய்யப்பட்ட சுனி முஸ்லிம் அமைப்பான லக்ஷர் - ஈ - ஜாங்வியே காரணமென, பலுசிஸ்தான் மாகாண பொலிஸ் ஆணையாளர் சொஹெய்ப் சுதில் கூறுகின்றார்.

1980 ஆம் ஆண்டிலிருந்து நடந்துவரும் ஷியா - சுனி முஸ்லிம் பிரிவுகளுக்கிடையிலான மோதலில், இதுவரை ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.



உறவினை இழந்த சோகம்.

உலகவலம்

# ஐரோப்பிய யூனியன் இணைவு போலந்து மக்கள் சம்மதம்!

ஐரோப்பிய யூனியனில் இணைவதற்காக, போலந்தில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில், 75 சதவீதமான மக்கள் இணையும் முடிவுக்குச் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

58 சதவீதமான வாக்குப் பதிவு நடைபெற்றதாகவும், 50 சதவீதமான வாக்குப்பதிவே ஆகக் குறைந்தளவில் - கருத்துக்கணிப்புக்குத் தேவையாக இருந்ததென்றும் - போலந்து அதிகாரிகள் தெரிவித்தனர்.

போலந்தின் இம்முடிவு, தனக்கு மகிழ்ச்சியைத் தருவதாகப் போலந்து ஜனாதிபதி அலெக்ஸாண்டர் வானிஸ்வ்கி தெரிவித்தார்.

ஐரோப்பிய யூனியனில் இணைந்து கொண்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளில், போலந்தே பெரியது என்பது குறிப்பிடத்தக்கது.

இருதினங்களாக நடந்த வாக்கெடுப்பில் - முதல்நாளான சனிக்கிழமை, 17.61 சதவீத மக்களே வாக்கெடுப்பில் ஈடுபட்டிருந்தனர். இதனால், கருத்துக்கணிப்பு செல்லுபடியற்றதாகிவிடுமோ என்ற அச்சம் நிலவியது. ஆனால் - ஞாயிறன்று பெருவாரியான போலந்து மக்கள் கருத்துக்கணிப்பில் வாக்களித்ததால் - அது உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.

இதேவேளை - போலந்தைச் சொந்த இடமாகக் கொண்ட பாப்பரசர் ஜான் போல், 'போலந்தின் வரலாற்று முக்கியத்துவம் மிக்க தீர்ப்பு' என இக்கருத்துக் கணிப்பை வர்ணித்தார்.

# அணு ஆயுதங்களை பெருக்குவோம்; வடகொரியா பகிரங்கமாக அறிவிப்பு!

(லண்டன்)

அணு ஆயுதங்கள் தாயாரிப்பதை, இன்னமும் விரிவுபடுத்தப் போவதாக - வடகொரியா முதற்தடவையாகப் பகிரங்கமாக அறிவித்துள்ளது.

வடகொரியாவின் உத்தியோகபூர்வ செய்தி ஸ்தாபனமான - 'பியோங்யாங்' இதுபற்றிக் கூறுகையில், அமெரிக்காவிடமிருந்து எதிர்பார்க்கப்படும் மரபுசார்ந்த மற்றும் அணுவாயுத ரீதியிலான அச்சுறுத்தலை எதிர்கொள்ள, வடகொரியா தயாராக இருப்பதாகத் தெரிவித்தது.

ஏனையோரை மிரட்டுவதற்காக வல்ல இராணுவ பலத்தைப் பேணவும் - மக்கள் அச்சமின்றி வாழக்கூடிய சூழலை உருவாக்கவுமே - அணுவாயுதத் திட்டத்தை விரிவுபடுத்த, வடகொரியா முயற்சித்து வருவதாக - 'பியோங்யாங்' மேலும் குறிப்பிட்டது.

சுமார் பதினொரு இலட்சம் இராணுவத்தினரைக் கொண்டுள்ள வடகொரியா, உலகில் அதிகூடிய படையினரைக் கொண்டுள்ள நாடுகளில் ஒன்று என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நலிவுற்ற மாணவர் கல்வி வளர்ச்சிக்கு வன்னிப் பகுதியில் நிதியம் ஆரம்பிப்பு!

(கிளிநொச்சி)

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு, பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய வங்கியினூடாக - வன்னியிலுள்ள, கல்வியில் நலிவுற்ற மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக, நிதியமொன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இந்த நிதியத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு, கிளிநொச்சி மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவன ஒன்றுகூடல் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை பி.ப 4 மணியளவில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சவுந்தர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், தியாகி அறக்கொடை நிறுவனத்தின் அனுசரணையுடன், முதற்கட்டமாக 40 மாணவர்களுக்கு இந்த நிதியம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் - மாணவர்களும், அவர்களது பெற்றோர்களும் கலந்து கொண்டனர். கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முரளி, மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் ஆவர்த்தனா, தமிழீழ மாணவர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் ஈழப்பிரியன் ஆகியோர் இந்நிதியத்தின் அவசியம், அதன் பயன்பாடு பற்றி உரைநிகழ்த்தியதும், சாள்ஸ் அன்ரனி சிறப்புத் தளபதி நகுலனும், ஏனைய பொறுப்பாளர்களும் வங்கி வைப்புப் புத்தகங்களை சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு வழங்கினர்.

# "சண்டி மல்லி" கொலையுடன் தொடர்புடையவர் தப்பினார்!

(கொழும்பு)

தென்மாகாண அமைச்சர் 'சண்டி மல்லி'யின் படுகொலையுடன் தொடர்புடையவரெனச் சந்தேகிக்கப்படும், அவரது நெருக்கிய சகாவான பாதாள உலகத் தலைவர் - அமரதாஸ என்று அழைக்கப்படும் பம்பொத்த, துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தபோது, அங்கியிருந்து தப்பியுள்ளார்.

வெள்ளவாய காட்டுப்பகுதியில் இடம்பெற்ற, துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த இவர், வேறொரு பெயரில் மொனராகல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

பொலிஸார், இவர் குறித்த தகவலை அறிந்து அங்கு சென்றபோது - அவர் தப்பிவிட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

'சண்டி மல்லி' யின் நெடுங்கால சகாவான இவர், 'சண்டி மல்லி' படுகொலையுடன் தொடர்புடையவரென்றும், சஜித் பிரேமதாஸாவை கொல்லுவதற்கான முயற்சியில் ஈடுபட்டவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# நோர்வே பிரதமரின் கூற்றை உறுதிப்படுத்த கோருகிறார் கதிர்காமர்

(கொழும்பு)

இலங்கை தொடர்பாக, நோர்வேப் பிரதமர் பொணடவிக் தெரிவித்ததாகக் கூறப்படும் கருத்தை உறுதிப்படுத்துமாறு - நோர்வேத் தூதுவருக்கு ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர், கடித மூலம் கேட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை, ஜனாதிபதி சந்திரிகாவை - லக்ஷ்மன் கதிர்காமர் சந்தித்துப் பேசியதையடுத்தே, நோர்வேத் தூதுவருக்கு இக்கடிதம் அனுப்பப்பட்டது.

நோர்வேப் பிரதமர் இலங்கை குறித்து வெளியிட்ட கருத்தை உறுதிப்படுத்துமாறும், அவ்வாறு கூறாவிட்டால் அதனை நிராகரிக்குமாறும் கதிர்காமர் கேட்டுள்ளார்.

# தன்னைப் புலிகள் பயமுறுத்தியதாக பொலிஸ்காரர் பொய் முறைப்பாடு!

## கண்காணிப்புக்குழு விசாரணைகளில் அம்பலம்

அம்பாறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தரான, முருகேசு சுந்தரலிங்கம் என்பவர், புலிகளால் மிரட்டப்பட்டதாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு செய்த முறைப்பாடு பொய்யானது என, விசாரணைகள் மூலம் தெரியவந்திருப்பதாகவும், இதனையடுத்து இவருக்கெதிராக பொலிஸார் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்போவதாக அறிவித்திருப்பதாகவும் - அம்பாறை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதியான, சட்டத்தரணி ஏ.சௌந்தரராஜன் தெரிவித்தார்.

கடந்த மாதம் 30 ஆம் திகதி, அம்பாறையிலிருந்து காரைதீவு நோக்கி பஸ்வண்டியில் சென்றுகொண்டிருந்தபோது, கைத்துப்பாக்கியைக் காட்டி, இருவர் தன்னைப் பயமுறுத்தி- பஸ்ஸில் இருந்து கீழிறக்கி, காரைதீவு தமிழீழ விடுதலைப்புலிகள் அலுவலகத்திற்கு கொண்டு சென்று பயமுறுத்தியதாகவும், தான் அம்பாறை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதாகவும் மேற்படி பொலிஸ் உத்தியோகஸ்தர் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து - அம்பாறை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, காரைதீவு விசேட அதிரடிப்படையி னர், சம்மாந்துறைப் பொலிஸார், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர், புலிகள் தரப்பு பிரதிநிதிகள் எனப்பல மட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் மேற்படி முறைப்பாடு - புனையப்பட்ட பொய் என நிரூபிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் இடம் பெற்றதாக தெரிவித்த தினங்களில் புலிகளின் அலுவலகம் மூடப் பட்டிருந்ததாகவும் தெரியவந்தது.

பொலிஸ் உத்தியோகஸ்தரான சுந்தரலிங்கம் என்பவரின் முறைப்பாடு உண்மைக்குப் புறம்பானதும், புலிகள் இயக்கம் மீது வேண்டுமென்றே பழிசுமத்தும் செயலெனவும். சமாதானத்தை குழப்பும் ஒரு நடவடிக்கையாகவே இதனைக் கருத வேண்டியிருப்பதாகவும், போர் நிறுத்த கண்காணிப்புக்குழு உறுப்பினரான சட்டத்தரணி ஏ.சௌந்தரராஜன் மேலும் தெரிவித்தார்.

# உதவுவது போல் நடித்து நோயாளரை ஏமாற்றும் திருடர்!

## அவதானமாக இருக்க அறிவுறுத்து

(வண்ணை)

யாழ். போதனா வைத்தியசாலை நோயாளர் விடுதிகளில், தங்கிச் சிகிச்சைபெறும் நோயாளர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள்-தங்க ஆபரணங்கள் அணிவதையும், தேவைக்கதிகமான உடைமைகளை வைத்திருப்பதனையும், தவிர்க்குமாறு வைத்தியசாலை வட்டாரங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

யாழ்.போதனா வைத்தியசாலை விடுதிகளில், நோயாளருக்கு உதவுவது போல் பாசாங்கு பண்ணி, அவர்களிடம் இருந்து - பணம், சுடுநீர் போத்தல் என்பன திருடப்படும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன.

அதேவேளை, வெளிநோயாளர் பிரிவிலும், நோயாளர் தொகை அதிகரித்துள்ளதால், அங்கும் அவதானமாக இருக்கும்படி தெரிவிக்கப்பட்டது. (111)

# ரத்வத்த மீதான ஊழல் புகார் குறித்த விசாரணைகள் முடிந்ததாக அறிவிப்பு

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவின் மீதான, ஊழல் புகார்கள் குறித்த விசாரைணைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக - லஞ்ச ஊழல் தடுப்புத் துணைக்குழு தெரிவித்துள்ளது.

பல மாதங்களுக்கு முன்னர், தனியார் வங்கி ஒன்றில் அனுருத்த ரத்வத்தவுக்கு சொந்தமான 4 கோடி ரூபா பெறுமதியான வைப்புப் பணச் சான்றிதழ்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அனுருத்த ரத்வத்தவின் வங்கிப் பெட்டகம் தொடர்பாக, நாடாளுமன்றத்தில் இருந்தும், ஜனாதிபதி செயலகத்தில் இருந்தும் அறிக்கைகளை லஞ்ச ஊழல் ஆணைக்குழு பெற்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# யாழ்.குடாநாட்டில் 80 சதவீதமானோர் நிவாரணத்தை நம்பி வாழ்கின்றனர்!

## அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன கூறுகின்றார்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் வசிக்கும் எண்பது சதவீதமான மக்கள், புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்படும் இடம்பெயர்ந்தோர் உலர்உணவு நிவாரணத்தை நம்பித்தான் வாழ்க்கை நடத்துவதாக - புனர்வாழ்வு, புனரமைப்பு, அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கண்டி வீதியிலுள்ள 'றான்' விடுதியில், நேற்றுமாலை 3.30 மணியளவில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் மேற்படி தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

அண்மையில் - புனர்வாழ்வு அமைச்சின் அனுசரணையுடன்- யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பதியப்பட்ட பிறப்பு, இறப்புக்களை பதிவதற்கான 'அதே இடத்தில் சேவை' போன்று ஏனைய மாவட்டங்களிலும் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளேன்.

இந்த அமைச்சு, ஏனைய அமைச்சுக்களைப் போன்று பாரம்பரியமான ஓர் அமைச்சல்ல. இது வடபகுதியைப் புனரமைப்பதற்கென - பிரதமரால் உருவாக்கப்பட்ட ஓர் அமைச்சு. சில அடிப்படைக் கொள்கைகளை வைத்தே இது இயங்கியது. அதாவது - மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்பு என்பவற்றைத் துரிதப்படுத்துவதே இந்த அமைச்சின் நோக்கமாகும்.

ஆனால் - இந்த அமைச்சு யாழ்ப்பாணத்திற்கு எதனையும் செய்யவில்லையெனக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. யாழ். குடாநாட்டில் வசித்துவரும் எண்பது வீதத்திற்கு அதிகமான குடும்பங்கள் புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்படும், இடம்பெயர்ந்தோர் உலர் உணவு நிவாரணத்தை நம்பித்தான் வாழ்கின்றன.

அத்துடன், எனது அமைச்சில் பணிபுரியும் மூன்று உயரதிகாரிகள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களே எனவும் தெரிவித்த ஜயலத், மேலும் கூறும்போது -

எனது அமைச்சிற்கு இவ்வாண்டிற்கென, 225 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 40 மில்லியன் ரூபா நிதியினை - குடாநாட்டிற்கு சீரான மின்சாரத்தினை வழங்கும் நோக்கில் 'கூல்டியர்' நிறுவனத்திற்கு கடனாக வழங்கியுள்ளேன். அத்துடன் - முகமாலை மற்றும் ஓமந்தை ஆகிய சோதனைச் சாவடிகளுக்கு - பயணிகளின் நன்மை கருதி மின்சார வசதியை ஏற்படுத்துவதற்கு எட்டு மில்லியன் ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளேன் என்றார்.

நாட்டில், குறிப்பாக வட - கிழக்குப் பகுதியில், சமாதானத்தை ஏற்படுத்துவதில் பிரதமர் உறுதியாக உள்ளார். சமாதானத்தைக் குழப்பாது சில கட்டுப்பாடுகளுக்குப் பணிந்தே நடக்கவேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லி)

# சூழல் பாதுகாப்புத் தொடர்பாக பாடசாலைகளில் கருத்தரங்குகள்!

## பல்கலை தகவல் தொடர்புமையம் நடாத்துகிறது

சூழல் பாதுகாப்புத் தொடர்பான கருத்தரங்குகளை - யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் நடத்துவதற்கு, யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தின் தகவல் தொடர்பு மையம் ஏற்பாடு செய்துள்ளது.

நிலத்தடி நீர் மாசடைதல், பிளாஸ்ரிக் பொருட்களும் சூழலும், மண் அகழ்வதாலும், மரம்வெட்டுவதாலும் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் போன்ற விடயங்கள் குறித்து, கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளதாக தகவல் தொடர்புமையம் அறிவித்துள்ளது.

# வட - கிழக்கு மக்களின் தேவைகள்; நோர்வே தூதருக்கு அறிவிக்கப்பட்டன!

## யாழ்.மனிதநேய அமைப்புக்கள் ஒன்றியம் கடிதம்

வட-கிழக்குப் பகுதிகளில் யுத்தத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பான, தேவைகள் ஒட்டிய மதிப்பீட்டு அறிக்கையொன்றை, யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் - இலங்கைக்கான நோர்வே தூதுவருக்கு அனுப்பி வைத்துள்ளது.

வட - கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவேண்டிய புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அபிவிருத்திப் பணிகள் குறித்து, துறைவாரியாக மேற்படி தேவைமதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இடம்பெயர்ந்த மக்களின் மீளக்குடியமரும் செயற்திட்டங்கள், இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமானப் பணிகள் மற்றும் சமூக சேவை செயற்திட்டங்கள், கல்வி, வீடமைப்பு உட்பட உட்கட்டுமானப் பணிகள் குறித்தும் மேற்படி அறிக்கையில் மிக விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், வடக்கு - கிழக்குப் பகுதிக்கு என்று, தனியாக நிதி ஒதுக்கீடு செய்யாமல், இலங்கையை மீளமைத்தல் என்ற பெயரில் வட-கிழக்குப் பகுதிகளுக்கு மிகக்குறைவான நிதியே கிடைக்கும் வாய்ப்பு உள்ளதாகவும், இது தமக்கு மிகுந்த ஏமாற்றத்தை தருவதாகவும் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

# ரோக்கியோ நிதியுதவியின்படியான

## வட - கிழக்கு புனரமைப்பு யாவும் பிரதமரின் நேரடி கண்காணிப்பில்

(கொழும்பு)

ரோக்கியோ மாநாட்டில் கிடைக்கும் நிதியுதவியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அனைத்துச் செயற்திட்டங்களும், பிரதமரின் நேரடிக் கண்காணிப்பில் நடைபெறவிருக்கிறது.

வெளிநாட்டு நிதியுதவியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படவிருக்கும் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் அனைத்தையும், நேரடியாகக் கண்காணித்து வழிநடத்துவதற்கு - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்திருக்கிறார்.

இதற்காக - பிரதமரின் அலுவலகத்தில் தனியான பிரிவு ஒன்று உருவாக்கப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது.

வடக்கு - கிழக்குப் பகுதியில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்வாழ்வு செயற்திட்டங்களும், இவ்வாறு பிரதமரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்படவுள்ளன.

# இலங்கைச் சட்டங்களுக்கு...

மைப்பு திறனாற்றலுடன், வெளிப்படைத்தன்மையாக, பொறுப்புவாய்ந்தாகச் செயற்படுமெனவும்,

வட-கிழக்கிலுள்ள அனைத்துச் சமூகங்களினதும் நலன்களைப் பாதுகாக்கும் எனவும்,

விடுதலைப் புலிகளின் முக்கிய பங்கேற்பைப் பெற்றுக்கொள்ளும் எனவும்,

இலங்கையின் சட்டங்களுக்கு முரணாகாத வகையில் இருக்குமெனவும் தெரிவித்தார்.

அரசியல் ரீதியான இறுதித்தீர்வு பற்றிப் பேசும்போதே - அரசியலமைப்பு மறுசீராக்கம் அறிமுகமாகும் எனவும்,

இச்சந்தர்ப்பத்தில், இலங்கை மக்கள் அனைவரதும் தீர்மானத்தைப் பெறுவதற்காக சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும் எனவும், பிரதமர் ரணில் தனது உரையில் தெரிவித்தார்.

பிரதமர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது,

இன்று, இங்கு விடுதலைப்புலிகள் பங்கேற்காதது வருத்தத்திற்குரிய விடயம். இதனால், இழப்பைச் சந்திப்பவர்கள் வடக்கு-கிழக்கு மக்களாகவே இருக்கமுடியும். இந்த மாநாடு, அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகள் இருதரப்பும் இணைந்ததொரு முயற்சியாகவே அமைந்திருக்க வேண்டும். என்றாலும் - அமைதி முயற்சிகள் மிக விரைவில் மீள ஆரம்பமாகும்.

கடந்த சில வாரங்களாக, விடுதலைப் புலிகள் கொண்டுள்ள செயற்பாடு பற்றி நாமும் அதேபோன்றே உணரக்கூடியதாக இருக்கிறது. மக்கள் மிக விரைவான விளைவுகளையே எதிர்பார்த்து நிற்கின்றனர்.

நாங்கள் புதிதாகவும், ஆக்கபூர்வமாகவும் - புனரமைப்பு, அபிவிருத்திப் பணிகளை - சர்வதேச நிதியுதவி வழங்கும் சமூகத்துடனும், நிறுவனங்களுடனும் இணைந்து முன்னெடுக்கக்கூடியதாக, கட்டமைப்பொன்றை உருவாக்கியுள்ளோம் என்றார்.

வட-கிழக்கிற்கான நிதியுதவி மூலமான திட்டங்கள் - குறுங்கால, மத்தியகால அடிப்படையிலும், தெற்கிற்கான 'இலங்கையை மீளப்பெறும்' திட்டங்கள்- மத்தியகால, நீண்டகால அடிப்படையிலும், முன்னெடுக்கப்படும் எனவும் குறிப்பிட்ட பிரத்மர் -

இலங்கை அரச இயந்திரத்தின் கட்டமைப்பு விரைவில், முற்றுமுழுதான மாற்றத்திற்குட்படும் என்ற தகவலையும் வெளியிட்டார்.

வெளிநாடுகளின் உதவியுடனான, திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு, முழுப்பொறுப்பு ஏற்கும் விதத்திலும் - குறிப்பிட்ட காலத்திற்குள்ளும், தொழில்சார் தகைமையுடனும், பணியை முன்னெடுக்கும் வகையிலும் - மிகத் தரமான தனிநபர்களோடு, நிறுவனங்களும் அரசாங்கத்திற்கு வெளியிலிருந்து திட்டங்கள் நடைமுறையாவதை நிர்வகிக்கும் எனப் பிரதமர் குறிப்பிட்டார்.

வட - கிழக்கு உட்பட நாட்டின் சகல பாகங்களிலும் புனரமைப்பு, புனர்வாழ்வுப் பணிகளில், இந்தப் புதிய அமைப்பு முன்னேற்றங்களைக் கொண்டுவரக் கூடியதாக அமைவதுடன் - இலங்கை, வருமானங்களைப் பெருக்கி வறுமை நிலையிலிருந்து மீளவும் - ஏற்றவகையில் பொருளாதாரச் சீரமைப்புக்கு அடித்தளமிடும் எனவும், பிரதமர் தெரிவித்தார்.

(200,01)

# அரசிலிருந்து....

போட்டியிடப்போவதில்லை. நான் இந்த நாடாளுமன்ற ஆயுட்காலத்துடன் அரசியலில் இருந்து ஒதுங்குவதற்கு ஏற்கனவே திட்டமிட்டுவிட்டேன்.

தற்போது அமைச்சுப் பொறுப்பில் இருக்கும் இக்காலத்தில், அரசாங்கத்திடம் கூடிய நிதியைப் பெற்று - அதை மக்களுக்கு வழங்கவுள்ளேன் எனவும் அமைச்சர் மகேஸ்வரன் அங்கு தெரிவித்தார். (லி)

# நோர்வே...

அனுப்பிவைக்கப்பட்டது.

அதேவேளை, இந்திய அரசின் சார்பிலும் முக்கிய பிரதிநிதிகள் எவரும் இம்மாநாட்டில் பங்குகொள்ளவில்லை. ஜப்பானுக்கான இந்தியத் தூதுவர் மட்டுமே பங்குபற்றினார்.

# 3.8 பில்லியன்...

மில்லியன் டொலர் வீதம் நான்கு வருடங்களும் 800 மில்லியன் டொலரைத் தருவதாக வாக்குறுதியளித்துள்ளது.

ஒட்டுமொத்தமாக - 3724 மில்லியன்கள் அதாவது அண்ணளவாக 3.8. பில்லியன் நிதியுதவி கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

SPOKEN ENGLISH WITH GRAMMAR
LECTURES BY:-
MR.M.A.HARI
3 ஆவது புதிய பிரிவு ஆரம்பம்
14.06.2003 சனி மாலை 3.30 மணி
SATURDAY SUNDAY 3.30 p.m- 4.30 p.m
DIRECTOR
HARY'S INSTITUTE
இல. 564 கஸ்தூரியார் வீதி,
(யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலைக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.
(சி-1070)

## உள்ளூர் நிறுவனங்களின் பங்கேற்புடன்

# குறுகியகால செயற்திட்டங்கள் யு.எஸ்.எயிட் ஈடுபட ஆர்வம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் - பல்வேறு குறுகிய கால செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு, யு.எஸ்.எயிட் நிறுவனம் முன்வந்துள்ளது.

யாழ். குடாநாட்டிலுள்ள மக்களின், சமூக பொருளாதார விடயங்களில் அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய வகையிலான பல செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நிதி உதவிகளை வழங்குவதற்கு மேற்படி நிறுவனம் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது.

மிகக்குறுகிய காலத்தில் - பொதுமக்கள் பயனடையக்கூடிய வகையிலான செயற்திட்டங்களை, உள்ளூர் நிறுவனங்களின் பங்களிப்புடன் யு.எஸ்.எயிட் செயற்படுத்தப்படவுள்ளது. இதற்காக, ஏற்கனவே பல குறுகிய காலச் செயற்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. (க)

# ரோக்கியோ மாநாட்டின் பின் இந்தியா செல்கின்றார் பீரிஸ்

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ரோக்கியோ மாநாட்டை முடித்துக்கொண்டு இந்தியா செல்லவுள்ளார்.

ஜப்பானில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் கலந்துகொண்டிருந்த அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நாடு திரும்பாது, அங்கிருந்து இந்தியா பயணமாவார்.

இவர், இந்தியாவில் அரசியறதலைவர்களைச் சந்தித்து, இன்றைய சமாதான நிலைப்பாடு தொடர்பாக விளக்கவுள்ளார்.

# யாழ்.குடாநாட்டிலும்...

விசேட இடர்காலக் கொடுப்பனவு வழங்கவேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே - இந்த வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இன்று யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெறும் வேலைநிறுத்தம் - நாளைமுதல் ஆதார வைததியசாலைகளுக்கும், நாளை மறுதினம் முதல் அனைத்து வைத்திய சாலைகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

வேலைநிறுத்தத்தில் ஈடுபடும் மருத்துவர்கள் அவசரசிகிச்சைகளை மட்டுமே நோயாளிகளுக்கு வழங்குவர் என்றும், வைத்திய கலாநிதி குமரவேள் மேலும் தெரிவித்தார்.

(க,லி)

# புலிகள் பங்குபற்றாதது...

தெரிவிக்கும்போது -

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் மீண்டும் கலந்து கொள்வதன் மூலம் விடுதலைப் புலிகள் சமாதானம் குறித்துத் தமது அர்ப்பணிப்பை வெளிக்காட்டவேண்டும்.

விடுதலைப் புலிகள் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதன் மூலம், பேச்சுவார்த்தைகளில், சமாதான முயற்சிகளில் புலிகளுக்கு உள்ள ஈடுபாட்டையும், நம்பிக்கையையும் தமிழ் மக்களுக்கும், இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும், உதவி வழங்கும் உலக நாடுகளுக்கும் உணர்த்தவேண்டுமென்று, நான் தனிப்பட்ட முறையில் கேட்டுக்கொள்கிறேன்.

சமாதான முயற்சிகள் வெற்றி பெறவேண்டுமானால், ஜனாதிபதியின் ஒத்துழைப்பும் அவசியமாகும். இலங்கையில் இருக்கும்- கட்சிகளுக்கிடையில் கருத்துவேற்றுமைகள் இருக்கலாம். பொதுப்பிரச்சினையைத் தீர்ப்பதில், ஒற்றுமை இருக்க வேண்டும். இந்த விடயத்தில், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் பங்களிப்பு முக்கியமானது. பேச்சுவார்த்தைகளின் முடிவுகள் ஜனாதிபதியின் கைகளிலேயே இருக்கின்றன. சமாதான நடவடிக்கைகளில் ஜனாதிபதி காத்திரமான பங்களிப்பை ஆற்றியதை நாம் நன்கறிவோம். அதனால், மீண்டும் இந்தப் பங்களிப்பை அவர் வழங்குவார் என்று நாம் விரும்புகின்றோம் என, ஆர்மிரேஜ் மேலும் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.